www.tamilarangam.net
தந்துதவியவர்: தேசம்நெற்

The EelaBhoomi

# ஈழபூமி

The Weekly Tamil Newspaper in Europe

ஆண்டு 1 வாரம் 3 15-11-1991 வெள்ளிக்கிழமை

அன்பளிப்பு U.K. 40p Germany: 2.00DM, France: 5FF, Swiss: 2SF, Canada: 1.25Ca$

## எதிர்பாருங்கள்...

தாயகத்தில் நடக்கும் நிகழ்வுகள், இங்கு வாழும் தமிழர்களின் செய்திகள், இன்னும் கதை, கட்டுரைகள் ஆகியனவுடன் தற்போது வெளி வரும் ஈழபூமி, மாதம் முதல் வாரத்தில் மாத இதழாகவும் இன்னும் பல விடயங்களுடன் வெளிவர உள்ளது. இவ்விதழில் பிரசுரிப்பதற்கு வாசகர்களிடம் இருந்து ஆக்கங்களை எதிர் பார்க்கிறோம். இவ்விதழை உங்கள் ஆக்கங்களுடன் உங்களுக்காகவே வெளியிடுகிறோம்.

நேரு காந்தி பரம்பரை ஆட்சி அழிந்துவிட்டதா?



பக்கம் 3

ஐரோப்பாவில் அகதிகளாகும் தமிழ் அகதிகளின் நிலை என்ன?




ஆய்வுக்கட்டுரை பக்கம் 6

நாடு திரும்பிய அகதிகளுக்கு நடந்த சித்திரவதை

பக்கம் 10

# இந்திய சதியா!

கடந்த 7ஆம் திகதி ஆரம்பமாக விருந்த சார்க் மகாநாடு இந்தியாவின் சதியினாலேயே நிறுத்தி வைக்கப்பட்டதாக நம்பிக்கையான வட்டாரங்கள் அறிவிக்கின்றன.

கடந்த 7ஆம் திகதி ஆரம்பமாகவிருந்த சார்க் மகாநாடு இந்தியாவின் சதியினாலேயே நிறுத்தி வைக்கப்பட்டதாக நம்பிக்கையான வட்டாரங்கள் அறிவிக்கின்றன. ஏழு நாடுகள் அங்கம் வகிக்கும் இந்த சார்க் மகாநாட்டின் தற்போதைய தலைவரும் பூட்டான் மன்னருமாகிய ஜிக்மே சிங்கே வாங் சுக் தனது நாட்டின் பாதுகாப்பு காரணங்களை காட்டி, தான் கலந்து கொள்ள முடியாது என அறிவித்ததை தொடர்ந்தே இம் மகாநாடு ஒத்தி வைக்கப்பட்டது. ஆனால் இந்தியாவின் இரகசிய தலையீட்டை அடுத்தே பூட்டான் இம் முடிவை எடுத்ததாக இவ் வட்டாரங்கள் அறிவிக்கின்றன.
இந்தியா ஏற்கனவே இலங்கை இந்திய சமாதான ஒப்பந்த விடயத்தில் பிரேமதாசா மீது அதிருப்தி கொண்டுள்ளது. அத்துடன் லலித்தும், காமினியும் தற்போது பிரேமாவை கவிழ்க்க சந்தர்ப்பம் பார்த்தபடி உள்ளார்கள். இந்தச் சந்தர்ப்பத்தை பாவித்து இந்தியா இவர்கள் இருவருக்கும் உதவும் நோக்கிலே இம் மகாநாட்டை நடத்த விடாமல் தடுத்துள்ளது.

இலங்கை-இந்திய ஒப்பந்தம் உருவாகக் காரணமாயிருந்தவரும் ஒப்பந்தந்துக்கு முன் டெல்லி சென்று சகல நடவடிக்கையும்

9 ஆம் பக்கம் பார்க்க

## ஓமந்தையில் குண்டு வீச்சு

(வவுனியா கார்த்.14)

ஓமந்தை பகுதியில் கடந்த 48 மணி நேரத்தில் பலத்த விமானக் குண்டு வீச்சு தாக்குதல் நடைபெற்றுள்ளதாக கடைசியாக கிடைத்த செய்திகள் கூறுகின்றன. விடுதலைப் புலிகளை வன்னிப் பகுதியை விட்டு வெளியேற்ற இராணுவம் நடவடிக்கை எடுக்கப்போவதாக வெளியிட்ட அறிக்கையைத் தொடர்ந்தே இத்தாக்குதல்கள் நடைபெற்று வருகின்றன. வவுனியாவில் சில பகுதிகளில் ஹெலியில் இருந்து துப்பாக்கி பிரயோகமும், ரொக்கட் தாக்குதல்களும் நடைபெற்றுள்ளன. இதனால் ஏற்பட்ட உயிர்ச் சேதம் பற்றிய விவரங்கள் இன்னும் கிடைக்கவில்லை.

இதே வேளை இலங்கை அண்மையில் புதிதாக வர்ங்கிய குண்டு வீச்சு ஜெட் விமானங்களை யாழ் நகரில் பரிசோதித்துப் பார்த்ததாகவும் இதனால் மக்கள் கிலியுற்று இருப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் கூறுகின்றன. ஆனால் கடந்த சில நாட்களாக யாழ் நகரில் இராணுவம் பாரிய தாக்குதல் எதனையும் நடாத்தவில்லை. தற்போது வன்னிப் பகுதியில் புலிகளை அழிக்கும் நட

9 ஆம் பக்கம் பார்க்க

## புலிகளைக் குழப்பும் யாழ் கமாண்டர்

(எம்.எஸ்.சலீம் )

அண்மையில் இலங்கை இராணுவத்தின் யாழ் கமாண்டர் விஜய விமலரட்ன விடுத்த அறிக்கையில் தாம் விடுதலைப் புலிகளின் வானொலித் தொடர்புகளை ஒட்டுக் கேட்டதில் பால்ராஜ் என்பவருக்கு மாத்தையாவை விட கூடுதல் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதாகவும்
இதனால் மாத்தையா மன முடைந்து போயிருப்பதாகவும் கூறியதுடன் வடக்கில் நடக்கும் உக்கிரமான தாக்குதலினால் யோகி வன்னி காட்டுக்குள் ஓடி விட்டதாகவும் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் புலிகள் மிகவும் இக்கட்டான நிலையில் இருப்பதாகவும் தமக்கு ஆதரவு வழங்குமாறு அவர்கள் அடிக்கடி ஒலி பெருக்கி மூலம் மக்களை கேட்டுக்கொள்வதாயும், ஆனால் மக்கள் அவர்கட்கு உதவும் மன நிலையில் தற்போது இல்லை என்றும் தெரிவித்தார். மட்டக்களப்பு பகுதியைச் சேர்ந்த புலிகளையே பலதாக்குதலில் இவர்கள் பாவித்துள்ளதாகவும் ஆனால் அவர்களின் இழப்பு பற்றி மட்டுநகர் பொறுப்பாளர் கரிகாலனுக்கு விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடம் அறிவிக்காததினால், மட்டுநகர்ப் புலிகள் ஆத்திரம் அடைந்திருப்பதாகவும் மேலும் தெரிவித்துள்ளார்.

## வவுனியா வர 3 நாட்கள்

(வவுனியா கார்த். 14)

தற்போது வடக்கிலிருந்து வருவோர் பல இன்னல்களைக் கடந்து வவுனியா வந்து சேர மூன்று நாட்கள் பிடிக்கிறது. முத்திரைச்சந்தியில் இருந்து இயக்கச்சி வருவோர், மூன்று மைல் தூர பரவைக் கடலை கால் நடையாகக் கடந்து, பின்னர் படகில் பயணம் செய்ய வேண்டும். பரவைக் கடலில் ஆழம் கூடிய பகுதிகளை தோணி மூலம் கடக்க வேண்டும்.

இப் படகுப் பயணம் முடிந்ததும் சேறும் சகதியும் வாய்க்கால்களும் நிறைந்த சுமார் மூன்று மைல் தூரத்தை மீண்டும் கால்நடையாக கடந்து முரசுமோட்டையை சென்றடைய வேண்டும். பின் அங்கிருந்து 500 ரூபா செலவு செய்து தனியார் பஸ்ஸில் நொச்சிமேட்டையை வந்து சேர மூன்று நாட்கள் பூர்த்தியாகி விடும். இத்தனை இன்னல்களுக்கும் மத்தியில் பலர் வவுனியாவுக்குப் வந்து சேர்வதாக கடைசியாக கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

## படை முகாமில் தங்க விரும்பும் மக்கள்

(எம்.எஸ்.சலீம் )

அம்பாறை மாவட்டத்தில் அக்கரைப்பற்று, தம்பிலுவில், திருக்கோவில், வினாயகபுரம் பகுதித் தமிழ் மக்கள் தாம் அடிக்கடி இராணுவத்தினரின் சுற்றி வளைப்புக்கு உள்ளாவதால் தாம் வேலைக்குச் செல்ல முடியாது கஸ்டப்படுவதாலும் தாங்கள் இராணுவத்தினரின் படை முகாமுக்கே வந்து விடுவதாக விரக்தி அடைந்த நிலையில் கூறுகின்றனர்.

தமக்கு தற்போதய நிலையில் உணவும் உடையும் தந்தால் போதும் என இவர்கள் இராணுவத்தினரைக் கேட்டுள்ளனர். சுற்றி வளைப்பின் போது வீணாக மக்கள் துன்பம் அனுபவிப்பதிலிருந்து விடுபடவே இதனை தாம் கேட்பதாக இவர்கள் கூறியுள்ளனர். இப்பகுதியில் வாழும் மக்கள் தங்களை அடயாளப் படுத்திக் கொள்வதற்காக புகைப் படம் ஒன்றை படைமுகாமில் சமர்ப்பிக்கும் படி கேட்கப்பட்டுள்ளனர்.

## தீவுப்பகுதியில் மூன்று கடற்படைத் தளங்கள்.

(ஆனந்த சங்கர் கார்த்.14)

எழுவைதீவு, அனலைதீவு, புங்குடுதீவு ஆகிய பகுதிகளில் புதிதாக மூன்று கடற்படை தளங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் கடற் புலிகளின் நடவடிக்கைகளை கட்டுப்படுத்த

9 ஆம் பக்கம் பார்க்க

## தொடரும் தாக்குதல்கள்

வடமராட்சி பகுதியின் பல பகுதிகள் தொடர்ந்தும் கடற்படையின் குண்டுவீச்சுத் தாக்குதலுக்கு உட்பட்டிருப்பதாக விடுதலைப் புலிகளின் செய்திகள் கூறுகின்றன. இவர்கள் மேலும் தெரிவிக்கையில் கடந்த வாரம் கடற்படை மீதான தாக்குதலில் காயமடைந்த இலங்கை கடற்படை அதிகாரி அமரவீர கொழும்பு ஆஸ்பத்திரியில் பலியானதாகவும் திருமலை, மட்டக்களப்பு பகுதிகளில் தாம் இராணுவத்தினர் மீது கடும் தாக்குதலை நடாத்தி வருவதாகவும் தெரிவித்துள்ளனர். மட்டக்களப்பு பகுதி தாக்குதலிலும், திருகோணமலைத் தாக்குதலிலும் பல இராணுவத்தினர் உட்பட 5 ஊர் காவற்படையினர் கொல்லப்பட்டதாகவும் மீண்டும் திருமலையில் சிங்கள இனத்தைச் சேர்ந்தவர்களை குடியேற்றுவதாகவும் இவ்வறிக்கை மேலும் கூறுகிறது.

9 ஆம் பக்கம் பார்க்க

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# உலகச் செய்திகள்

## இரு லிபியர்களுக்கு பிடிவிறாந்து

1988 இல் ஸ்கொட்லண்டில் நடைபெற்ற 'பனாம்' விமான குண்டு வெடிப்பு சம்பவத்தின் சூத்திரதாரிகள் என கருதப்படும் இரு பலஸ்தீன பயங்கரவாதிகளுக்கு பிரிட்டன் நீதி மன்றம் பிடிவிறாந்து பிறப்பித்துள்ளது. இக் குண்டு வெடிப்பு சம்பவத்தில் 270 பயணிகளும் உள்ளூர்வாசிகளும் பலியாகி இருந்தனர்.. இச் சம்பவத்துக்கு லிபியாவே, பயங்கரவாதிகளுக்கு முழு உதவியையும் செய்துள்ளதாகவும் தற்போது அவர்கள் லிபியாவிலேயே இருப்பதாகவும் பிரிட்டனும், அமெரிக்காவும் குற்றம் சாட்டி வருகின்றன. லிபியா இவர்கள் இருவரையும் உடனடியாக தம்மிடம் கையளிக்க வேண்டும் என பிரிட்டனின் வெளியுறவுச் செயலாளர் நாயகம் கேட்டுள்ளார். ஆனால் இதற்கு லிபியா, தமக்கும் இச்சம்பவத்திற்கும் எவ்வித தொடர்பும் இல்லை என மறுப்புத் தெரிவித்துள்ளனர். அமெரிக்கா விடுத்துள்ள அறிக்கையில் தமக்கு சகல நாடுகளும் இவ்விடயத்தில் ஆதரவு தரவேண்டும் என்றும் இச்சம்பவத்தில் லிபியாவைத் தவிர சிரியா, ஈரான் போன்ற வேறு சிலநாடுகளும் சம்பந்தப் பட்டிருப்பதாக கூறியுள்ளது.

## அரபாத்தைக் கொல்ல சவுதியும் குவைத்தும் சதி

(எம்.எஸ்.சலீம் )

பலஸ்தீன இயக்கத் தலைவர் யசீர் அரபாத்தைக் கொல்வதற்கு குவைத்தும் சவுதி அரேபியாவும் அபு நிடால் என்றழைக்கப்படும், பலஸ்தீனிய இயக்கத்தின் இன்னும் ஒரு பிரிவின் தலைவருக்கு மில்லியன் கணக்கில் பணத்தை வாரி இறைக்கிறார்கள். அபு நிடால் உலகத்தில் தற்போது மிகவும் பரபரப்பாக தேடப்பட்டுவரும் ஒரு பயங்கரவாதி ஆவார்.

இந்த ஆண்டு நடந்து முடிந்த வளைகுடாப் போரில், யசீர் அரபாத்தின் பிரிவு ஈராக்கிற்கு ஆதரவு தெரிவித்ததை அடுத்தே சவுதியும், குவைத்தும் அபு நிடாலுக்கு ஆதரவு அளித்து வருகின்றன. அபு நிடால் லிபியத் தலைவர் கடாபியின் அரவணைப்பிலேயே தற்போது உள்ளார். கடந்த ஜனவரியில் பீ.எல்.ஒ வின் உப தலைவர் அபு லியாட்டின் கொலைக்கும் இவரே பின்னணியில் இருந்தார் என பீ.எல்.ஒ குற்றம் சாட்டி வருகிறது. மேலும் இவர் தற்போது நடைபெற்று வரும் மட்றிட் மத்தியகிழக்கு சமாதான மகாநாட்டுக்கு தீவிர எதிர்ப்புத் தெரிவித்தோடு தொடர்ந்து இஸ்ரவேலியர்கள் மீது தாக்குதல் நடாத்தியும் வருகிறார்.

## பதினொரு வருட சிவில் யுத்தம் முடிவு?

எல்சல்வடோரில் சுமார் 11 வருடகாலமாக நடக்கும் சிவில் யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவர ஐக்கிய நாடுகள் சபையின் ஆதரவுடன் அரசும் தீவிரவாதக்குழுக்களும் பேச்சுவார்த்தை நடாத்தி வருகின்றன. இப் பேச்சுவார்த்தை வெற்றிகரமாக நடப்பதாகவும் வெகுவிரைவில் ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட இருப்பதாகவும் தெரியவருகிறது. எல்சல்வடோரில் FMLN இயக்கத்தினர் அமெரிக்க ஆதரவில் உள்ள அரசைக்கலைக்க போராடி வருகின்றனர். இவர்களுக்கு நிக்கரகுவாவும், கியூபாவும் ஆதரவு அளித்து வந்தனர். தற்போது நிக்கரகுவாவில் ஏற்பட்டுள்ள அரசியல் மாற்றமே இச் சமாதான பேச்சுவார்த்தைக்கு காரணம் என கூறப்படுகின்றது. இச்சிவில் யுத்தத்தினால் ஆயிரக் கணக்கில் மக்கள் இறந்து அல்லது காணாமற் போயுள்ளனர் உள்ளனர். அம்நஸ்டி இன்ரநஷனல் பதிவேடுகளில் சிவில் யுத்தத்தினால் இறந்து அல்லது காணாமற் போனவர்கள் எண்ணிக்கை அதிகமாக உள்ள நாடுகளில் எல்சல்வடோரும் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது.

## லண்டனில் பெருகும் குற்றங்கள்

(லண்டன் நிருபர்)

லண்டனில் மட்டும் 910,000 குற்றங்கள் கடந்த 12 மாத காலப் பகுதியில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இதில் 22,100 வீதிக் குற்றங்களும், 5,500 பாலியல் வன்முறைகளும் குறிப்பிடத்தக்கவை. இந்தக் காலப் பகுதியில் மட்டும் 1,120 பெண்கள் மீதான பலாத்கார சம்பவங்கள் நடைபெற்றுள்ளதாகவும், இது ஒரு நாளுக்கு 3 பலாத்கார சம்பவம் என்ற வீதத்தில் உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் 38,200 வன்முறைத் தாக்குதல்களும், 80,000 கார் திருட்டுச் சம்பவங்களும் இக் காலப் பகுதியில் இடம் பெற்றுள்ளது. எல்லாவற்றிலும் மேலாக வீடு உடைப்பு சம்பவங்கள் கடந்த வாருடத்துடன் ஒப்பிடுகையில் 13 வீதம் அதிகரித்துள்ளது. மக்களின் கவனமின்மையாலேயே இது 188,000 ஆக அதிகரித்துள்ளதாக பொலிஸார் அறிவித்துள்ளனர்.


**London Academy of Computing & Electronics**

58A Upper Tooting Road, London SW17 7PB, UK

Tel: 081-767 4698

London Academy of Computing & Electronics provides full time FE courses in Business Studies, Computing and English for UK and overseas students at competitive rates. LACE is a member of NCC and is recognised by professional bodies and examination boards including ABAC, ACP, ABE, AAT, IOS, ACEA, City & Guilds, FBA, and IDPM. Recognised by the British Home Office as a bona-fide college for visa requirements. Full student support and advisory service for overseas students. Students affiliated to NUS. One of the best value-for money college in London.

ABE COURSES

**ABE Certificate, Diploma and Advanced Diploma in Business Administration**
Three six month courses leading to ABE Certificate, Diploma and Advanced Diploma.
Intake: January and July

**ABE Certificate in Hospitality Management**
A six month course leading to ABE Certificate. Intake: January and July

**ABE Single Subject Revision Courses**
Revision courses for students wishing to retake one or more subjects in ABE examinations.

OTHER COURSES

**ABAC/ACP Certificate and Diploma in Business Computing**
A two year courses leading to the ABAC or ACP Diplomas. Intake: October and March.

**IDPM Parts I, II, III, IV**
A two year course leading to IDPM I-IV. Intakes: January and July.

**Computer Literacy**
Three and six month course in practical computing. Intakes: monthly

**Computer Programming**
A one year course in computer programming. Intakes: October and March.

**Office Software**
Tutorial classes in common office software including Database, Word-processing and Spreadsheet. Intakes: weekly

**LACE Diploma in Desktop Publishing and Print Management/ DTP Graphics Design**
One year course in DTP leading to the LACE Diplomas in DTP and Print Management/DTP and Graphics Design. Intakes: October and March.

**English for Foreign Students**
Six month and one year courses leading to Cambridge Preliminary and First Certificate in English. Intakes: October and March.


## மூன்று தலைவர்கள் இலங்கை விஜயம்



*இலங்கைக்கு விஜயம் செய்த பங்களாதேஷ் அதிபர் பேகம் கஹெலடா சியா, பாகிஸ்தான் அதிபர் நவாஸ் ஷரிப், மாலைதீவு அதிபர் மமூன் அப்துல் கயூம்.*

சார்க் மகாநாடு திட்டமிட்டபடி நடைபெறாத போதும் பாகிஸ்தான், மாலைதீவு, பங்களாதேஷ் தலைவர்கள் இலங்கைக்கு விஜயம் செய்துள்ளார்கள். இம் மூன்று நாடுகளுடன் இலங்கை உட்பட இந்தியா, பூட்டான் ஆகிய நாடுகள் இச் சார்க் கூட்டின் அங்கத்துவ நாடுகள். இவர்கள் ஒத்திவைக்கப்பட்ட மகாநாட்டை நடாத்துவது குறித்துப் பேசியதாகவும் அதுபற்றி எதுவித நடவடிக்கையும் எடுக்காமலேயே இவர்கள் நாடு திரும்பி விட்டதாகவும் அறிவிக்கப்படுகிறது.

பூட்டான் மன்னர் விஜயத்துக்கும் அழைப்பு விடுத்த முறைக்கும் தொடர்பில்லை.

விமான சேவையில் ஏற்பட்ட தடங்கலால் இலங்கை வெளியுறவு அமைச்சர் நேரடியாக பூட்டான் மன்னருக்கு அழைப்பு கொடுக்க முடியாமையும் இம் மகாநாட்டு ஒத்திவைப்பிற்கு காரணம் என்ற சிலரின் கூற்றிற்கு மறுப்புத் தெரிவித்துள்ளது இலங்கை அரசு. இதற்கு ஆதாரமாக பூட்டான் மன்னர் ஏற்கனவே தான் மகாநாட்டில் பங்கு பற்றுவதாக கடந்த ஐப்பசியில் எழுதிய கடிதத்தை சுட்டிக் காட்டியுள்ளது. மேலும் அக்டோபர் 25 ஆம் திகதி பூட்டான் மன்னரிடம் புது டில்லியில் உள்ள இலங்கை உயர் ஸ்தானிகர் தமது நியமனப் பத்திரங்களை கையளிக்க விஜயம் செய்திருந்தார். இச்சந்தர்ப்பத்தில் தான் மகாநாட்டில் கலந்து கொள்வதாக மன்னர் உறுதி அளித்திருந்தார். அதுமட்டுமல்ல கொழும்பில் மன்னரை ஏற்றி வரும் விமானம் தரையிறங்கும் நேரம் கூட குறிக்கப்பட்டிருந்தது. ஆனால் திடீரென பாதுகாப்பை அவர் காரணம் காட்டுவது எல்லார் மனதிலும் கேள்வியை எழுப்பியுள்ளது.

## யாழ்நகரில் மீண்டும் பொலிஸ் நிலையங்கள்

(ஆனந்த சங்கர் கார்த்.14)

வெகு விரைவில் ஆனையிறவு, ஊர்காவற்துறை, புங்குடுதீவு அகிய இடங்களில் மீண்டும் பொலீஸ் நிலையங்களைத் திறக்க இலங்கை அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

இப் பொலீஸ் நிலையங்கள் யாழ் பொலீஸ் மாஅதிபர் திரு ஜெயராஜனின் நிர்வாகத்தின் கீழ் இயங்கும். இந் நிலையத்தில் கடமையாற்ற பொலீஸாரை ஏற்கனவே தெரிவு செய்து விட்டதாகவும் சிவில் நிர்வாகம் இப் பகுதியில் வெகு விரைவில் அமுலுக்கு வந்து விடும் என இலங்கை அரசு அறிவித்துள்ளது. இப் பகுதிகள் ஏற்கனவே இலங்கை இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ளது என்பது யாவரும் அறிந்ததே. அத்துடன் வெகுவிரைவில் யாழ்நகரிலும் பொலீஸ் நிலையமொன்றை திறப்பதற்கான ஒழுங்குகளை பொலீஸ் தலைமையகம் மேற்கொண்டு வருவதாக தெரியவருகிறது. இதற்கான உயர் அதிகாரிகளையும் உத்தியோகத்தர்களையும் தெரிவு செய்யும் நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

இராணுவத்தினர் வெகு விரைவில் யாழ்ப்பாணத்தை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்து விட முடியும் என்று உறுதி அளித்ததை அடுத்தே இந் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

The Eela Bhoomi
# ஈழபூமி
The Weekly Tamil Newspaper in Europe

ஆண்டு 1 வாரம் 3 15-11-91 வெள்ளிக்கிழமை

## ஈழபூமியின் ஏட்டில் இருந்து....

### வடபகுதி மீதான தாக்குதல்களும் இடம் பெயர்ந்து அலையும் மக்களும்.

அண்மையில் கூட்டுப்படை தலைமை அதிகாரி முனசிங்க விடுத்த் அறிக்கையும், அதனைத் தொடர்ந்து அரசபடைகள் நடாத்தி வரும் அட்டூளியங்களும், மீண்டும் தமிழீழ மக்கள் மீது தனது தர்பார் நாடகத்தை நடாத்த ஸ்ரீ லங்கா அரசு இட்டிருக்கும் திட்டம் என்பது தெளிவாகத் தெரிகிறது.

கோயில்களிலும் பாடசாலைகளிலும் உடன டியாகத் தஞ்சம் புகுமாறு அறிக்கை விடுத்த மறுநாளே குண்டுமாரி பொழியும் அரச குண்டு வீச்சு விமானங்கள் பல்லாயிரக்கணக்கான மக்களின் சொத்துக்களை அழித்துக் கட்டியுள்ளன. தஞ்சம் புகுமாறு கூறிவிட்டு தஞ்ச விடுதிகளின் மேல் குண்டுத் தாக்குதல்களை நடாத்தி அப்பாவி மக்களை கொன்று குவித்து விட்டு, புலிகளின் மறைவிடங்களைத் தாம் தாக்கியிருக்கிறோம் என்கிறது சூனியக்காரர்களிடம் அரசியல் ஆலோசனை பெறும் பிரேமதாசாவின் ஸ்ரீ லங்கா அரசு.

மூன்று மாதங்களுக்கு மேலாக பொரு ளாதாரத் தடையை விதித்து, மக்களின் அன்றாட தேவைகளைப் பெற்றுக் கொள்வதைத் தடுத்து துன்புறுத்திய ஆக்கிரமிப்பு அரசு, மேலும் மக் களை அழிவுக்கு கொண்டு செல்லும் செய லாகவே அண்மைத் தாக்குதல்களை நடத்து கின்றது என்பதில் ஐயமில்லை.

மண்டைதீவு, பருத்தித்துறை, காரைநகர் பகுதிகளில் பெரும் தொகையான காட்டு மிராண்டிப் படைகளை குவித்து முன்னேற முனையும் அரசு, வவுனியா பூந்தோட்டம் வழி யாகவும் தனது படைகளை யாழ் நோக்கி நகர்த்த முனைகிறது. இதன் பொருட்டு வீடுகளை தீயிடுதல், மக்களை கொன்று குவித்தல், சொத் துக்களை அழித்தல் போன்றவை இருபக்கமும் முடக்கி விடப்பட்டுள்ளன. இதுவரை வவு னியாவை அண்டிய பகுதிகளில் உள்ள இட ங்களில் உள்ள வீடுகள் யாவும், தீவைத்து எரித்தோ அன்றி குண்டுகளால் தகரக்கப்பட்டோ முற்றாக அழிக்கப்பட்டு விட்டன.

மீண்டும் ஒரு அழிவுக்கான திட்டத்தை தீட்டி விட்டு அப்பாவி மக்களை அழித்துவரும் அரசின் செயல்களை வன்மையாகக் கண்டிக்கத் தவறினால், அரசு தனது இராச்சியத்தை பொது மக்கள் மீது நினைத்த மாதிரி நடாத்தி விடும்.

உலக நாடுகளின் ஸ்தாபனங்களுக்கும், உலக பெரும் நாடுகளிற்கும் இது பற்றி அறி வித்து உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள நாம் அனைவரும் முயற்சித்தல் இன்றியமையாதது.

தொடர்புகளுக்கு.........
**The Eela Bhoomi,**
**164A (Rear) Mitcham Road,**
**London SW17**

# உருவாகும் அரசியல் வாரிசு பிரியங்கா

நேரு காலத்தில் இருந்து ரஜீவ் காலத்துடன் காந்தி பரம்பரை ஆட்சி அழிந்து விட்டதா என்று பலரும் இப்போது இந்தியாவில் அங்கலாய்க்கிறார்கள். இதனை தொடர வைக்க பலரும் பல விதத்தில் முயன்று வருகிறார்கள். ரஜீவின் மனைவி சோனியா வை எப்படியும் அரசியலுக்குள் இழுத்துவிட பகீரத பிரயாத் தனங்கள் நடைபெற்ற போதும் அவர் மசியவில்லை. அவருடைய ஆதரவாளர்கள் உண்ணா விர தம் இருந்து கூடப்பார்த்தார்கள் ஊகூம் அவர் வெளியே வர வேயில்லை.

அண்மையில் ரஜீவின் தொகு தியான அமேதியில் இடைத் தேர்தலில் நிற்பதற்கும் இவர் மறுப்புத் தெரிவித்து விட்டார். இது ஒருபுறம் இருக்க இந்திரா காங்கிரசின் இடைக்கால தலை வராக நியமிக்கப்பட்டு தற் போது பிரதம மந்திரியாக இரு க்கும் 70 வயது நிரம்பிய நர சிம்மராவ் இன்னும் சில நாட் களில் இடைத்தேர்தலை சந்திக்கப் போகிறார். இவர் இந்திய அர சியலில் பல மாற்றங்களை புகுத்த முனைந்துள்ள போதிலும் இந் தியாவின் வெளிநாட்டுக் கடன் விஷம் போல் ஏறிக்கொண்டுதான் இருக்கிறது. இருப்பினும் பண வீக்கம் 16 சதவிகிதத்தில் இரு ந்து சிறிது குறைந்தும், அந்நியச் செலவாணி கூடியும் இருப்பது இவர் புகுத்திய மாற்றங்களின் பலாபலன்கள் என்றுதான் கூற வேண்டும். மேலும் இவர் நட் டத்தில் இயங்கும் அரசுக்கு சொந்

## நேரு காந்தி ஆட்சி அழிந்து விட்டதா?

*விசுவன்*

தமான நிறுவனங்களை தனியார் மயப்படுத்தியும் ஏன் சிலவற்றை இழுத்து மூடவும் செய்துள்ளார். இவையெல்லாம் காந்தி பரம்பரை ஆட்சியிலும் சரி எவர் ஆட்சி யிலும் சரி, இம் மாதிரி மாற் றங்கள் முன்பு நினைத்துப் பார் க்க முடியாத ஒன்று. அண்மை யில் இந்தியாவின் நிதியமைச்சர் வெளிநாட்டு நிறுவனங்களை இந் தியாவில் முதலிட அழைப்பு விடுத்துள்ளார். இவற்றையெல் லாம் அலசி ஆராயும் பொழுது காங்கிரஸ் தன் கட்சி பாரம் பரியத்தை விட்டு விலகி புதிய வழியில் போகிறது என்றுதான் கூறவேண்டும். இதனால் கட்சி க்குள் சில இழுபறிகள் வந்த போதிலும் தன் கொள்கைகளை விட்டு மாறப்போவதில்லை என ராவ் உடும்புப் பிடியாகவுள்ளார்.



கூடவே தன் கொள்கைகளை விஸ்தரிக்க முன்போல் பின் கதவு வழியாகச் சென்று ஆதரவு திரட்டாமல் எல்லோருடனும் ஒற் றுமையாகப் பேசி அவர்களின் ஆதரவுடன் செயற்பட்டு வரு கிறார். இவருக்கும் மேலாக இருபது ஆண்டுகளிற்குப் பின் முதன் முதலா கட்சித் தலைவர் பதவிக்கான தேர்தலுக்கு எதிற் வரும் ஜனவரியில் நாள் வேறு வைத்து விட்டார். எல்லா வற்றுக்கும் சிகரம் வைத்தால் போல், ரஜீவுடன் பகைத்துக் கொண்டு கட்சியை விட்டு விலகி புதுக் கட்சி ஆரம்பித்த, வீ.பீ சிங்கை மீண்டும் கட்சிக்குள் இழுத்துவிட பிராயத்தனம் செய் து வருகிறார்.


இப்படி காங்கிரஸ் கட்சி புதிய பாதையில் எழுந்து போவதைப் பார்த்தால் நேரு-காந்தி பரம்பரை இல்லாவிடின் காங்கிரஸ் இல்லை என்பது நிர்மூலமாக்கப்பட்டு விடும். ஆனாலும் நேரு-காந்தி பரம்பரை அட்சி நிரந்தரமாக அழிந்து விட்டது என்று கூற முடியாது. தற்போது ரஜீவின் தொகுதியில் போட்டியிடும் சதீஸ் சர்மா (ரஜீவின் தேர்தல் பிரச்சார ஆலோசகர்) நேரு-இந்திரா குடும் பத்திற்கு எப்பொழுது அந்தத் தொகுதி வேண்டுமோ அக் கணமே தான் கொடுத்து விடு வதாக கூறியுள்ளார். ஆனால் இதற்கு முடிவு எடுக்க வேண் டியவர்கள் 21 வயது நிரம்பிய ராகுலும், 19 வயதே உடைய பிரியங்காவும் தான்.

## விலைமாதாக வந்த திரௌபதி

தற்போது வாரா வாரம் பீ.பீ. சியில் மகாபாரதம் தொடர்ச்சியாக வருவது யாவரும் அறிந்ததே. ஆனால் அதில் நடிக்கும் நட்சத் திரங்களைப் பற்றி உங்களுக்குத் தெரியுமா? திரௌபதியாக நடி க்கும் ரூபா கங்குலி மகாபார தத்திற்கு முன் 'கனதேவா' என்ற தொலைக்காட்சித் தொடரில் விலைமாதாக நடைத்தவராம்.




இவர் தன் சக பாத்திரங் களைப் பற்றி குறிப்பிட்டிருந்த பொழுது அர்ச்சுனன் ஒரு ஷோக்குப் பேர் வழி என்றும், தர்மர் தப்பி வாழத்தெரிந்தவர் என்றும் சகாதேவன், நகுலனுக்கு பாத்திரத்திரப் படைப்பிலேயே அக்கறை இல்லை எனக்கூறிய அவர், பீமனாக நடிப்பவரே நிஜ மனிதன் எப்படி வாழ்கிறானோ அப்படி வருகிறான் என்றார். சகுனியாக நடிக்கும் குவ்பி றயில் பட்டம் பெற்றவர் அது மட்டுமல்ல மகாபாரதத்திற்கு தலைமை டிஸைனரும் இவரே. இவர் மகாபாரதத்தில் சாய்ந்து சாய்ந்து நடப்பதற்கு காரணம் 'அப்துல்லா' என்ற இந்திப் படப் பிடிப்பில் குதிரைச்சவாரி செய் யும் போது கால் எலும்பு முறிந்து போனதே. ஆனால் அந்தக் குறை, சகுனி வேடத்திற்கு சரியாகப் பொருந்தி இருக்கிறது.




www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## ஈழபூமி விளம்பரப் பகுதி

### மணமகன்

30 வயது நிரம்பிய சைவ வேளாளர் குல பயிற்றப்பட்ட ஆசிரியைக்கு சகோதரர்கள் மணமகன் தேடுகிறார்கள். தகுந்த சீதனம் கொடுக்கப்படும். வி.இ.ஆ10

32 வயதுடைய கணவனை இழந்த பெண்ணிற்கு மணமகன் தேவை. வி.இ.ஆ11

29 வயது நிரம்பிய லண்டனில் கணக்கியலாளராயிருக்கும் மணமகளிற்கு மணமகன் தேவை. தகுந்த சீதனம் கொடுக்கப்படும். வி.இ.ஆ12

26 வயது நிரம்பிய லண்டனில் வசிக்கும் செவ்வாய்குற்றமுள்ள சைவ வேளாளர் குல மணமகளிற்கு மணமகன் தேவை. வி.இ.ஆ13

### மணமகள்

27 வயது நிரம்பிய டென்மார்க்கில் இருக்கும் மெதடிஸ்ற் சமய மணமகனிற்கு அழகிய மணமகள் தேவை. சீதனம் எதிர்பார்க்கவில்லை. வி.இ.பெ45

### விற்பனைக்கு

சிவப்பு நிற ீ இலக்க Blue Bird 2.0 கார் குறைந்த மைலேஜ். வி.இ.வி14

சில்வர் நிற ீ இலக்க Dutsun கார் நல்ல நிலையில் M.O.T & Tax உடன் விற்பனைக்குண்டு. வி.இ.வி15

### தேவை

நியூ மோல்டன் பகுதியில் அறைகள் சாப்பாட்டு வசதியுடன் வாடகைக்கு உண்டு வாரம் £40 தொலைபேசி 081 949 8054.

# அகிம்சையில் இருந்து ஆயுதம்வரை

பாலன்

சென்ற இதழ் தொடர்ச்சி

இதனை நிவர்த்தி செய்வது என்றால் வெறும் தமிழீழம் பரிகாரமாகி விடுமா? இக்கேள்விக்கு விடை காணும் பொருட்டு சிந்தித்ததன் விளைவே, மக்கள்; சாதிக்கு அடிப்படையான தொழிற்பிரிப்பும், தொழிலுக்கு அடிப்படையான பொருளாதாரப் பிரச்சனையும், அந்தப் பிரச்சனையைத் தீர்ப்பதன் மூலம் இந்நிலையை அகற்றலாம் என்பதை விளங்கிக் கொள்ளவேண்டும். அவ்வாறு விளங்கி கொள்ள உரிய வேலைகளை முன் எடுத்துச் செல்ல வேண்டும் என்ற கட்டாய முடிவுக்கு வந்தது. இதன் கொள்கையில் இருந்து ஈ.பி.ஆர்.எல்.எப் இன் கொள்கை அவ்வளவாக வேறுபட்டிருக்கவில்லை.

அடுத்த பிரச்சனை தொடர்பாக புளொட் அணுகிய முறையை இனி நோக்குவோம். பெண்ணடிமை, வடக்குக் கிழக்குப் பகுதிகளின் மொத்தச் சனத்தொகையில் 55 ஆனோர் பெண்கள். இவர்கள் காலா காலமாக சம்பிரதாயங்களினாலும், பாரம்பரியங்களினாலும் கட்டுப்படுத்தப் பட்டிருந்தார்கள். இதனை உறுதிப்படுத்தும் பொருட்டு இலங்கை அரசின் கல்வித் திட்டமும் அமைந்திருந்தது குறிப்பிடத் தக்கது. குறிப்பாக பெண்ணடிமை தொடர்பாக இனங்கண்ட பிரச்சனைகள் ஆவன, ஆணுக்கு பெண் சரிசமம் அல்ல என்ற ஆண்களின் வேதம், பெண்களை வேலைக்குப் போகக் கூடாது கட்டிலிலே முந்தானை விரிப்பதும், பிள்ளையை பெற்று தொட்டிலிலே போட்டுத் தாலாட்டுவதும் தான் பெண்ணின் கடமை. குமர்ப் பிள்ளைகள் படிக்கக் கூடாது, திருமணம் செய்வதற்கு சீதனம் கொடுக்க வேண்டும். பெண்கள் மென்மையானவர்கள் என்ற மனப்பாங்கை ஏற்படுத்தல் என்பன வையே ஆகும்.

இவற்றை நாம் விரிவாக ஆராய்ந்தால், இலங்கையின் கல்வித்திட்டம் எப்படி பிழையான முறையிலே அமைக்கப்பட்டிருந்தது, அது எப்படி பெண் அடிமையை வலியுறுத்தியது என்பதைக் காணலாம்.

உதாரணமாக புராணங்கள், இதிகாசங்கள், இலக்கியங்கள் யாவும் பெண்ணை அடிமையாகவே சித்தரித்தன. கற்பைச் சோதித்த இராமன், கல்லானாலும் கணவன் புல்லால் ஆனாலும் புருஷன், பெண்புத்தி பின்புத்தி, பொம்பிளை சிரித்தால் போச்சு என்பன போன்ற பழமொழிகள் பாடசாலையில் கற்பித்தமையும், இவை சரிதானா என்ற விளக்கமின்றியே மாணவர்கள் விடப்பட்டமையும், பெண்கள் கட்டிலுக்கு உரியவர்கள் என்ற நிலையை மாணவர்களுக்கு கற்பிக்கும் சூழ் நிலையை உண்டுபண்ணியது.

ஒரு ஆணுக்கு பெண் சரிசமம் அல்ல என்ற தத்துவம் சமுதாய அமைப்பின் முறையோடு ஒன்றிணைந்து போனதும் ஆண் ஆதிக்கம் செலுத்துவது ஒரு நாகரிகம் ஆகவும் மாற்றப் பட்டுவிட்டது. ஒரு குடும்பப் பெண் ஒரு முடிவு செய்ய வேண்டும் என்றால் தன் கணவனுடன் ஆலோசித்து எடுக்க வேண்டும் என்ற நிலையின்றி, தான் கணவனின் அனுமதி எடுக்க வேண்டும் என்ற நிலையே எமது ஈழச் சமுதாயத்தின் யதார்த்தம். அது மட்டுமின்றி பாடசாலைக்கு போகும் பெண்கள் கூட குமர்ப் பிள்ளைகளாக வந்தவுடன் படிப்பை நிறுத்திவிட வேண்டும், ஆண் பிள்ளை மட்டும் உயர்கல்வி படிக்கலாம் என்ற நிலை பெண்களை அடிமைப்படுத்தும் அதிகார ஆண் வர்க்கத்தின் அடாவடித்தனங்களாகவே இருந்து வருகின்றது. குமர் பிள்ளை என்றால் குனிந்து நடக்கவேண்டும் பணிந்து போக வேண்டும், வீட்டின் சமையல் வேலைகளையெல்லாம் கற்றுக் கொள்ள வேண்டும், மனவியானவுடன் கணவனுக்கு பணிந்து நடக்கவேண்டும், அவன் குடிகாரனோ அன்றி கொடுமைக் காரனாக இருந்தால் கூட அவனைப்பிரிந்து வாழக்கூடாது. அப்படியே பிரிந்தாலும் அவள் அடங்காபிடாரி அல்லது வேசி என்ற சமுதாயத்தின் இழி சொல்லுக்கு ஆளாகவேண்டும் போன்ற நடைமுறைகள் எமது சமுதாயத்தோடு ஒட்டி உறவாடுவது ஊருக்கு ஊர் வித்தியாசப் பட்டுக் காணப்படுகிறதே தவிர அத்திவாரத்தில் எந்த வித்தியாசமும் காணப்படவில்லை.

இந்நிலை தமிழீழத்தில் தொடருமானால் மக்களின் விடுதலை மழுங்கடிக்கப் பட்டதாகவே போய் விடும் என்ற நிலைப் பாட்டை உணர்ந்து கொண்டன இயக்கங்கள். அதற்கான தீர்வு இனவிடுதலையுடன் கூடிய பொருளாதார விடுதலை, சமூக அரசியல் விடுதலையிலேயே தங்கியிருக்கின்றது என்பதை அடையாளம் கண்டுகொண்டமையால் கூட்டணி போன்ற அர

பூர்வமான சிந்தனையும் அதனுடன் கூடிய முன்னேற்பாடும் இயக்கங்களிடம் இருப்பதாக மக்கள் அடையாளம் கண்டனர்.

பெண்ணடிமை தொடர்பாக இயக்கங்கள் இனம் கண்ட இன்னுமொரு பிரச்சனை சீதனம். சீதனம் என்னுமொரு சமுதாய நோய் ஆட்கொண்டிருக்கும் முக்கிய தேசத்தில் ஒன்று ஈழம். வசதி படைத்தவர்கள் காணி, நிலம், சொத்து, பண்டம் என்று தம் மகள்மாரின் திருமணத்தின்போது அன்பளிப்பாகவோ அன்றி கடமையாகவோ கொடுத்து வந்த ஒரு வழக்கம் தமிழ் பேசும் சமுதாயத்தில் இருந்தது. இதன் வளர்ச்சி ஒரு பெண்ணின் வாழ்க்கையை நிர்ணயிக்கும் ஆயுதமாக மாறுமளவிற்கு இன்று உருப்பெற்றிருப்பது, வேதனைக்குரிய விடயமே. ஒரு பெண்ணிற்கு திருமணம் செய்ய வேண்டுமானால் அவளுக்கு வீடு, வளவு, குறைந்தது ஐந்து லட்சம் ரூபா சீதனம், இரண்டு இலட்சம் அன்பளிப்பு நகை நட்டு என்று ஆணுக்கு கொடுக்க வேண்டும். கேட்கும் தொகையில் ஒரு சதம் குறைந்தாலும் திருமணம் நடக்காது.

வைத்தியர், பொறியியலாளர், கணக்காளர் போன்றோரின் விலை தற்போது பத்து லட்சத்தையும் தாண்டி விட்டது குறிப்பிடத் தக்கது. பெண்ணோடு கட்டிலில் படுப்பதற்கும், பிள்ளைகள் கொடுப்பதற்கும் பணம் கேட்கும், ஆண்கள் விபச்சாரத்தினை கட்டுப்படுத்தும் துணிச்சல் எவருக்கும் இருக்கவில்லை. அதன் தார்ப்பரியம் உணரப்பட்டமையால் இவ்வியக்கங்கள் இதற்கு முற்றுப் புள்ளி போடும் பாதையை அணுகத் தொடங்கின. சமுதாயத்தில் இது போன்ற பிரச்சனைகள் தொடரும் போது தமிழ் தமிழ் என்று உளறித் திரிவதில் அர்த்தம் இல்லை என்பதை உணர்ந்து இயக்கங்கள் அரசியல் மார்க்கமாக வேலை செய்ய வேண்டும் என்பதை புரிந்து கொண்டு அதற்கு ஏற்ப கொள்கைகளை வகுத்தன.

இயக்கங்களினால் இனங்காணப்பட்ட அடுத்த முக்கிய பிரச்சனை பிரதேச வேறுபாடு. வடகிழக்கு மாகாணங்களினால் பிரதேச வேறுபாடானது வெவ்வேறு வடிவங்களை பெற்றிருக்கிறது. இதில் முக்கியம் பெறுவது யாழ்ப்பாண மேலாதிக்கம். படித்தவர்கள் கூடிய இடமாகத் திகழ்வதினால் யாழ்ப்பாண மக்கள் தாம் சமுதாயத்தில் கூடிய அந்தஸ்த்தில் இருப்பதாக கற்பனைக் கோட்டை கட்டியதும் கற்பித்தல், எழுதுனர் போன்ற பிரதான தொழில்களைப் புரிவதற்கும் இங்கிருந்தே ஆட்களை தெரிவு செய்ய நிர்ப்பந்தம் இருந்தமையும், இப்பகுதி மக்கள் வவுனியா, மன்னார், மட்டக்களப்பு இடம் பெயர்ந்தமையும், அங்கு நிலத்தின் விலை யாழ் நகரோடு ஒப்பிடுங்கால் மலிவாக இருந்தமை, அவர்களை அங்காங்கே காணிகளை வாங்கி குடியேறச் செய்தமையும், அவ்வப் பகுதிகளில் வாழ்ந்து வந்தவர்கள் தமது நிலம் பறிபோவதாயும் இப்பகுதி மக்கள் தம்மீது அதிகாரம் பிரயோகிப்பதாகவும் உணரத் தொடங்கினார்கள். இதன் அடிப் படையிலேயே பிரதேச வாதம் ஈழப் பிரதேசங்களில் தோற்றம் பெற்றது. இதிலே முக்கியமானது வன்னி-யாழ்ப்பாணம், மட்டுநகர்-யாழ்ப்பாணம், என்கின்ற பிரச்சனை என்றாலும் யாழ் நகருக்குள்ளேயே தீவுப்பகுதியார், ரவுன்காரர், கோசங்கள் இடையிடையே தோரணம் கட்டப்பட்டதும் இதன் இதர பிரச்சனையாக வகைப்படுத்தலாம்.

> " சீதனம் என்னுமொரு சமுதாய நோய் ஆட்கொண்டிருக்கும் தேசங்களில் ஒன்று ஈழம் "

தொடரும்


SAMRAS
Video & Spices

We Specialised in Old & New Tamil, Hindi & Malayalam Films

VISIT US FOR HIRE AND SALE AT BEST PRICE IN TOWN

Tamil, Hindi & Malayalam Film Sound Track, Devotional & Classical Audio, Compact Disk & Records
Sri Lankan & Indian Groceries Retail & Wholesales
Temple Abishekam Ingredients also available from us.
Latest daily, Weekly, Monthly, Tamil Magazines.

251A - 251B, Haydons Road
London SW19 8TX, U.K
Phone: 081-544 1686 Fax: 081-544 1745


## நண்பனின் அங்கலாய்ப்பு

அண்மையில் என் நண்பர் ஒருவரை விம்பிள்டன் ரயில் நிலையத்தில் சந்தித்தேன். நான் அவரை அணுகிய போது அவர் ரயில் பாதையையே வெறித்துப் பார்த்தபடி நின்றார். என்ன மச்சான் பலத்த யோசனை என்று வினாவிய போது அவர் பெருமூச்சுடன் சொன்னார், மச்சான் எங்கட ஊரிலையும் இப்படி ஒரு ஸ்ரேசன் இருந்தது ஆனால் இப்ப... நீ அந்த பீ.பீ.சி புறோகிறாம் பார்த்தனி தானே என்றார். நானும் ஓம் மச்சான் அதுகளை இப்ப ஏன் யோசிக்கிறாய் என்று கேட்க அவரும், இல்லை மச்சான் போன கிழமை இலங்கை அரசு களனியிலை புதிசா இரயில் பாதை கட்டி ரயில் விடுறாங்கள், ஆனால் எங்கட பகுதியிலை...... எல்லாம் அழிஞ்சு போச்சுது. இனி யாழ்ப்பாணத்துக்கு ரயில் சேவை வாழ்க்கையிலை கிடையாது என்றபோது நான் யாழ்நகரைவிட்டு இறுதியாக ரயிலில் கொழும்பு வந்ததை நினைத்துப் பார்த்தேன். அதுகளை நினைத்து பெருமூச்செறிவதை தவிர வேறு என்ன எம்மால் செய்ய முடியும் என்றபடி இருவரும் ரூட்டிங் செல்லும் ரயிலை பிடிக்க நடையைக் கட்டினோம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# வேலிக்கப்பால் சில மின்மினிகள்

ஈழபூமி சிறுகதை

பூங்கோதை

தங்கமணி ரங்கமணி வாம்மா நீ...... பாடலின் எட்டுக்கட்டை சுருதி அதிர்வில் நித்திரை சட்டென கலைந்து கொண்டது. இன்று சனிக்கிழமை என்ற நினைவே இன்னும் அதிக அலுப்பைத்தர மீண்டும் திரும்பிப் படுக்க வேண்டும் போலிருந்த்து. நேரம் பார்க்கலாம் என்று மெல்லத் தலையைத் தூக்க மேசை மேசை மணிக்கூடு அப்போது தான் நேரம் காலை ஏழரை என்றது. ரவி பாட்டை அலற விட்டிருந்தான்.

பக்கத்து வீட்டு கப்பிட்டல் ரேடியோவுக்கு போட்டியாக. திரைச்சீலைகள் விலக்கப் பட்டு ஜன்னல் திறந்து விடப்பட்டிருந்தது. கோடை வெயில் விடியற்காலையிலேயே மின்னலடிக்க, இளம் காற்று மெல்ல மெல்ல உள்ளே வந்து ஊரை ஞாபகப்படுத்தியது. இனி நித்திரை வராது என்ற முவில் எழும்பி கட்டிலின் ஓரத்தில் இருக்கிறேன்.

'குட் மோர்னிங் ரத்தினம்' என்ற ரவி தொடர்ந்து உடுப்புக்களை பாகுபடுத்தி மூட்டையாக கட்டிக் கொண்டிருக்கிறான். நித்திரையைக் குழப்பிவிட்டதற்காக அவனைத் திட்டலாம் போல இருக்கிறது. அவனோ முகம் எல்லாம் சிரிப்புடன் பாட்டை ரசித்தபடியே தனது வேலையில் கவனத்துடன் இருந்தவாறே என்னுடன் பேச்சைத் தொடர்கிறான். என்ன ரத்தினம் நல்ல நித்திரை கொண்டிட்டாய் போல இருக்கு. நான் இப்ப லோண்டறிக்குப் போகப் போறன். வர முதல் வெளிக்கிட்டு நின்றால், நானும் நீயும் ஒருதரம் கடைகளுக்குப் போய் வரலாம்.

சொல்லியபடியே ரவி வெளியே போய்விட நான் கட்டிலை விட்டு இறங்கி என் அலுவல்களைக் கவனிக்கிறேன்.

ரவியைப் பற்றி எப்போதும் எனக்கு ஒரு நல்ல எண்ணம் இருந்ததற்கு காரணம் அவன் எனக்கு ஒரு வகையில் குருவாக இருந்ததுதான். நான் இலண்டனுக்கு காலடி எடுத்து வைத்த நாளிலிருந்து இரண்டு வருடங்களாய் இந்த நாட்டின் நடைமுறை, பழக்கவழக்கம் பற்றி, தம்மைத் தாமே ஏமாற்றித் திரியும் நமது இனசனங்களைப் பற்றி இன்னும் எவ்வளவோ விடயங்களைப் பற்றிக் கூறி, என்னைத் தன்னுடன் தங்க அனுமதித்த அவன் உதவியை நான் மறக்க முடியாதுதான். ரவி இங்கு வந்து எட்டு வருடங்களுக்கு மேலாகி விட்டது எனக்கூறியிருந்தான். நாட்டில் நிம்மதியாக இருக்க முடியாத சூழ்நிலையில் இங்கு வந்து அவன் வீட்டுப் பொறுப்புக்களையும் சுமந்து உழைத்து உடலும் மனமும் உறுதியாகி விட்டிருந்தன. வாரம் ஒரு தடவை சிறிதளவில் குடிப்பதைத் தவிர வேறெந்தக் கூடாத குணங்களை நான் அவனிடம் கண்டறியாததால் அவனோடு சேர்ந்திருப்பதில் ஓரளவில் திருப்தியடைந்தேன்.

சனி, ஞாயிறு கிழமைகளில் மாத்திரமே பகல் பொழுதில் வீட்டில் நிற்பான். மற்றைய நாட்களில் இரவிலும், பகலில் பகுதி நேரமுமாக வேலை செய்வதால், சனி ஞாயிற்றுக் கிழமைகளில் அவன் என்ன அட்டகாசம் பண்ணினாலும் நான் பொறுத்துக் கொள்வது வழக்கம். மேலும் இன்னொரு விசேடம் என்ன வென்றால் அவனும் நானும் ஒரே ஊரில் அடுத்தடுத்த வீடுகளில் பிறந்திருந்

அம்மாவின் தூரத்து உறவான பண்டிதர் தம்பதிகளின் மூத்த புதல்வன். பார்க்கப் போனால் உறவு முறையில் ரவி எனக்கு சகோதரனாகவும் இருந்தான். ஆனால் ஊரில் இவன் இருந்தவரையில் எனக்கும் அவனுக்கும் சினேகித பாவமோ அல்லது உறவு என்ற முறையில் பாசமோ இருந்தது கிடையாது. பார்த்த இடத்தில் தலையாட்டுவதோடு சரி. ரவியுடன் கூடப் பிறந்த தம்பி குமாரோடு படித்த காரணத்தால் குமாரோடு மட்டும் எனக்கு நன்கு பழக்கம் இருந்தது. ஆகவே ரவி என்னுடைய இலண்டன் பிரவேசத்தின்பின் கிடைத்த முற்றிலும் புதிய சினேகிதன் தான். இதுவரையில் என்னைப் பற்றி அவனோ அல்லது அவனைப் பற்றி நானோ எமது வீடுகளுக்கு எழுதியது கிடையாது. இவ்வளவு ஏன் என்னுடைய வீட்டிற்கு இதுவரையில் நான் ரவியுடன் இருப்பதே தெரிய வாய்ப்பில்லை. இன்றளவும் அம்மா நான் என்னுடைய மாமா வீட்டில் இருப்பதாகவே நம்பிக்கொண்டிருப்பதாயும் நான் சொல்ல வேண்டும்.

எனது நினைவுகள் பின்னோக்கி நகர்ந்தன.

நான் இலண்டனுக்கு வரக் கிளம்பிய போது அம்மா அழுது கண்ணீர் சிந்தி மிளகாய்த்தூள், மீன் பொரியலோடு சொல்லச் சொல்லக் கேட்காமல் இருபது வருடங்களாக இலண்டனில் சீரும் சிறப்புமாக இருக்கும் அண்ணைக்கு எனக் கூறி, என்னுடைய மாமாவுக்கு பிடிக்குமாம் என நல்லதாக ஒரு கட்டு சுருட்டும் தந்தனுப்பினாள். இத்தனைக்கும் நான் அகதியாகவே வந்து சேர்ந்தேன். மாமா விமான நிலையம் வந்து சேர்ந்த போது நான் விமானத்திலிருந்து கெட்டித்தனமாக இறங்கி இரண்டு மணி நேரம் ஆகியிருந்தது. மாமாவும் அதிகாரிகளும் ஆங்கிலத்தில் உரையாடினார்கள் அப்போது எனக்கு அதிகமாக ஆங்கில ஞானம் இல்லாவிட்டாலும் அவர்கள் கதைத்ததை கூட்டிப் பெருக்கி அறிந்து கொண்டேன். எனது உடைகளுடன் வைத்திருந்த பொரித்த மீனை சுட்டிக் காட்டி தூரத்தில் நின்ற அதிகாரி ஏதோ கேட்பதும் மாமா தடுமாறுவதும் எனக்குப் புரிந்தபோது அம்மாவின் மேல் சரியான கோபம் வந்தது.

"இன்னதென்று வகைப்படுத்தமுடியாத ஒரு உடை அணிந்திருந்தாள். ஜீன்ஸிற்கும், பாவாடைக்கும் இடைப்பட்டதாக இருந்தது"

ஒரு வழியாக நான் மாமாவோடு கிளம்பி அவருடைய வீட்டை வந்தடைந்தேன். நான் மிகவும் சிறிய வயதில் இருந்த போது மாமா யாழ்ப்பாணம் வந்து மாமியைத் திருமணம் செய்து கொண்டு போனதாக அம்மா அடிக்கடி கூறுவாள். ஆனால் அம்மா ஆரவாரம் செய்யும் அளவிற்கு மாமாவிடம் இருந்து கடிதங்கள் வந்ததாக எனக்கு ஞாபகம் இல்லை. ஆதலால் மாமாவின் இப்போதைய நிலைமைகள் எனக்குத் தெரிந்திருக்கவில்லை. மாமா என் எண்ணங்களுக்கு முற்றுப்புள்ளி வைத்து தேநீரையும், கேக் துண்டையும் என் முன் வைத்து உபசரித்தார். ஊர் புதினங்களைக் கேட்டார். தன்னோடு படித்த ஒரு

தெரிந்திருக்கவில்லை. மீண்டும் ஊர்க் கதைகளுக்குத் தாவிய போது, முன்கதவு திறபடும் ஒசையும் அதைத் தொடர்ந்து மாமா 'வாங்கோ ராணி' என வரவேற்ற விதமும் எனக்கு அவதான் மாமி என்பதை உணர்த்தியது. மாமி என்னை அடையாளம் காண முடியாது என்பதால் மாமாவே என்னை அறிமுகப்படுத்தி வைத்தார். தொடர்ந்தால் போல் 'ராணி ரத்தினம் எங்களுக்கு அருமையான மீன் பொரியல் கொண்டு வந்திருக்கிறான். தங்கச்சி கொடுத்தனுப்பியிருக்கிறாள்.' என்று சொல்ல மாமி 'ஒ இஸ் இற்? வெரி நைஸ். எனக்கு ஒரு மாதத்திற்கு பிரச்சினை இல்லை" என்றவாறே என்னைப் பார்த்து புன்னகைத்தார். எனது வருகையைவிட மீன் பொரியலின் வருகை மாமிக்கு சந்தோஷத்தைக் கொடுத்திருக்க வேண்டும்.' நல்ல வேளை நீர் சம்மர் காலத்தில் வந்திருக்கிறீர் வீட்டில எல்லோரும் சுகமாய் இருக்கினமோ' என விசாரித்து விட்டு உட் பக்கம் போய்விட்டா மாமி. நான் மாமா, மாமி இருவரையும் பார்த்தவுடனேயே ஓரளவு அவர்களுடன் சமாளிக்கலாம் என திருப்திப் பட்டுக்கொண்டேன்.

அடுத்த சில நிமிடங்களில் என் மனம் மாறி விடும் என்று நான் நினைத்திருக்கவில்லை நானும் மாமாவும் ஓய்வாக இருந்து டிவி பார்த்துக்கொண்டிருந்தோம் அப்போது தான் மீண்டும் கதவு திறபடும் ஒசையும் அதைத் தொடர்ந்து 'ஹாய் டாட்! டுமாறோ ஐயாம் .....' தொடர்ந்து சொல்ல வந்ததை பாதியில் நிற்பாட்டி

பார்த்து மாமா அவசரமாக 'ஷாமினி இவர் ரத்தினம் இன்றைக்குத்தான் சிலோனில் இருந்து வந்திருக்கிறார்..' மாமா சொல்லி முடிக்கமுன் என்னைப் பார்த்து 'ஹாய்' என்றாள் இன்னதென்று வகைப்படுத்த முடியாத ஒரு உடையணிந்திருந்தாள். ஜீன்ஸிற்கும் பாவாடைக்கும் இடைப்பட்டதாக இருந்தது. பின்கழுத்து முதுகு வரை இறங்கி இடுப்பைத் தொட முயற்சித்ததில், இலண்டனின் சம்மர் எனக்குப் புரிந்தது. என்னை வேறு உலகத்திலிருந்து வந்த ஒரு பிராணியைப் பார்ப்பது போல ஒரு வினாடி உற்றுப் பார்த்தாள். முகத்தில் கடுகளவேனும் சிரிப்பு வர முயற்சிக்கவில்லை ஷாமினிக்கு. மொத்தத்தில் அவளது தோலைத் தவிர நடை, உடை, பாவனை அனைத்திலும் அந்நிய நாட்டின் ஆக்கிரமிப்பு அப்பட்டமாக தெரிந்தது. நிறத்தில் மட்டும் மாமாவைப் போல கறுப்பாக பிறந்ததில் அவளுக்கு நிச்சயமாக ஆதங்கம் இருக்க வேண்டும். பிரச்சினையில்லாமல் சாப்பாடும், வசதிகளும் கிடைத்ததில் முகத்தில் அலட்சியம் தெரிந்தது. எனக்கு ஏனோ உள்ளூறப் பயமாக இருந்தது ஏன் என்று எனக்கே தெரியவில்லை. மகளே இப்படியானால் மகன் என்ன நிலைமையோ என என்னால் யோசிக்க முடியவில்லை என்னை அதிகம் யோசிக்கவிடாமல் மாமாவின் மகனும் வந்து சேர்ந்தான் அவன் ஓரளவு என்னைப்போல இருந்தான் சகோதரியை விட சற்று அதிகமாக கதைத்துப் புன்னகைத்தான். தான் தரன் என்று சொல்லிவிட்டு கை குலுக்கினான். அவன் தலை மறைந்ததும் மாமா என்னைப் பார்த்து' இரண்டு பேரும் தமிழை விளங்கிக் கொள்ளுவினம்' என்று பெருமையாக சொன்னார். அப்படியே இரண்டு மூன்று மணி நேரம் கழிந்ததும் சாப்பாட்டு மேசையைச் சுற்றி இருந்தோம். மாமி ஏதேதோ பரிமாறினாள். எல்லோரும் சரளமாக ஆங்கிலத்தில் உரையாடினார்கள் நான் மட்டும் அவர்களில் இருந்தும் வித்தியாசமானவன் போல் உணர்ந்தேன்.

என்னையறியாமலே அம் மாவின் ஞாபகம் வந்து கண்ணை நிரப்பியது. நிறைய அழ வேண்டும் போல இருந்தாலும் கஸ்டப்பட்டு என்னை அடக்கிக் கொண்டேன். சாப்பா ட்டை ஒருவாறு முடித்த பின்தான், என்னை எங்கே தங்கவைப்பது என்ற பிரச்சினை அவர்களுக்குள் எழுந்தது. ஷாமினி தனக்கும் இதற்கும் சம்பந்தமே இல்லாத மாதிரி 'குட் நைட் எவ்ரி பொடி' சொல்லி விட்டு தனது அறைக்குப் போய்

சமாதானம் செய்து என்னை அவனுடன் தங்க வைத்தார். நான் அன்று இரவு முழுவதும் நித்திரை வராமல் யோசனையுடன் இருந்ததில் விடிந்து விட்டது. அடுத்த நாள் சனிக்கிழமை ஆதலால் எல்லோரும் வீட்டிலேயே இருந்தார்கள் ஷாமினி, தரன் இருவரும் கல்லூரிக்கு போவதையும், மாமி எக்கவுண்டனாக இருப்பதையும் மாமா சொல்லித் தெரிந்து கொண்டேன். எனது எதிர் காலம் மட்டும் எனக்கு முன் கேள்வியாய் அடிக்கடி தோன்றி பயமுறித்தியது.

நான் ஊரில் இருந்த போது அம்மா, அப்பாவை விட்டு கொழும்பு வந்து ஒரு வருடத்திற்கு மேலாக நின்று படித்திருக்கிறேன். அப்போதெல்லாம் உணராத முற்றிலும் அன்னியத்தன்மையை மாமா வீட்டில் உணர முடிந்தது. திரும்பவும் இந்த இடத்தை விட்டு ஓடி ஊருக்கு போகலாமா என யோசித்தேன். முடியாது. என்னை வீட்டில் வைத்திருக்கப் பயந்து அப்பாவின் பழைய நண்பரின் உதவியினால் அகதியாக அனுப்பப் பட்டதை எப்படி மறக்க முடியும்?

இந்த நேரத்தில் தான் மாமா வீட்டிற்கு ஏதோ அலுவலாக வந்த ரவியின் கண்களில் நான் தட்டுப் பட்டேன். அவன் என்னை உடனே அடையாளம் கண்டு கொண்டான் 'ஹலோ ரத்தினம் எப்ப இங்க வந்தனீர்? லண்டன் பிடித்திருக்கா?' கேள்விகளை கேட்டவனின் கண்களில் எனது பரிதாபமான முகம் இரக்கத்தை தோற்றுவிக்க, அவன் மாமாவிடம் கதைக்க வேண்டிய மாதிரி கதைத்து என்னை அங்கிருந்து விடுதலை செய்தான். ஆம். அதை விடுதலை என்று தான் சொல்ல வேண்டும். கதைக்க யாரும் இல்லாமல் எந்த விதத்தாலும் ஒற்றுமை ஏற்பட முடியாத மனிதர்களுடன் என்னால் சமாளிக்க முடியாமல் வெளிப்பார்வைக்குச் சிரித்து நடிக்க முடியவில்லை. மாமா உள்ளூற என் வெளியேற்றத்தை விரும்பினாலும் வெளிக்கு கவலைப்பட்டு, இறுதியில் அறையில்லாத காரணத்தால் என்னை ரவியுடன் அனுப்பி வைத்தார். ஆனால் இன்றளவும் அம்மா மாமா வீட்டு விலாசமிட்டு அனுப்பும் கடிதங்களை, மாமா ரவி வீட்டு விலாசத்திற்கு அனுப்பி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






# அகதிகளாகும் அகதிகள்

இலங்கையில் நிலவும் பல தரப்பட்ட பிரச்சனைகளால், கடந்த சில வருடங்களாக இங்கிலாந்துக்கு வரும் தமிழ் அகதிகளின் தொகை அதிகரித்துக் கொண்டே செல்கின்றது.

தமிழ் ஈழ விடுதலைப் போராட்டத்தின் பக்க விளை பொருளான இந்தத் 'தமிழ் அகதி'கள், இன்று ஐரோப்பாவில் ஒரு திரிசங்கு நிலையில் தொங்கிக் கொண்டு உள்ளனர். ஐரோப்பிய சமூகத்தில் தமிழர் என்றொரு இனத்தைத் தெரியாதவர்கள்கூட 'தமிழ் அகதி'கள் என்றொரு இனத்தை தெரிந்து வைத்திருக்கும் ஒரு உன்னத நிலைக்கு இந்தப் பிரச்சனை வளர்ந்திருக்கின்றது.

எமது நாட்டின் இன, மத, மொழி பிரச்சனைகளின் காரணமாக அகதிகளாக வந்த எம்மவர், கடந்த சில வருடங்களாக, சில போராட்ட அமைப்புக்களுக்கிடையே ஏற்பட்ட முரண்பாடுகள் காரணமாகவும், அவற்றிற்கிடையே ஏற்பட்ட அரசியல் போட்டிகளாலும், இங்கு அகதிகளாக வந்திருப்பது தவிர்க்க முடியாததொன்றே. இதனால் இன, மத, மொழி பிரச்சனைகள் மட்டுமல்லாது வேறு பல காரணிகளும் எம்மவரின் இந்தக் 'குடிப் பெயர்ச்சி'க்கு காரணமாக அமைந்துள்ளதை எவரும் மறுக்க முடியாது.

பிரித்தானியாவில் 1980-ஆம் ஆண்டில் பதினெட்டுப் பேருடன் தொடங்கிய இந்தக் குடிப் பெயர்ச்சி, இன்று 1990-ஆம் ஆண்டு 16 ஆயிரமாக அதிகரித்துள்ளது. எமது மக்கள், இன்று பிரித்தானியாவின், வேலை இல்லாப்பிரச்சனை, வீடில்லாப் பிரச்சனை, நிறப்பிரச்சனை போன்ற பல் வகைப்பட்ட பிரச்சனைகளுக்குள்ளும் சிக்குண்டு தவிக்கின்றார்கள். சிலர் சமூகத்துக்கு ஒவ்வாத, சமூகத்தைப் பாதிக்கும் பல குற்றச் செயல்களில் தம்மை ஈடுபடுத்திக் கொள்கின்றனர். மட்டுப்படுத்தப்பட்ட ஒரு கலாச்சாரத்தில் வளர்க்கப்பட்டவர்கள் இவ்வாறு ஈடுபட்டுள்ளது ஆச்சரியப்படக் கூடியதே.

இலங்கையில் 70-களின் பிற்பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட பல போராட்ட அமைப்புக்கள் திடீரென தம்மை 80-களில் வளர்த்துக்கொண்டன. இதற்கு 77-ஆம், 81-ஆம், 83-ஆம் ஆண்டுக்கலவரங்கள் முக்கிய காரணிகள் ஆகும். இதனால் பாதிப்படைந்த ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் பலர், தம்மை இந்தப் போராட்ட அமைப்புக்குள் பிணைத்துக் கொண்டனர். ஆனால் 80-களின் பிற்பகுதியில் ஏற்பட்ட இயக்க பிரிவினைகளாலும், இயக்க அரசியல் காரணமாகவும், பல போராட்டக்குழுக்கள் சிதைக்கப்பட்டன.

இந்த நிகழ்வுகளால் பல பிரச்சனைகள் உருப்பட்டன. மனோ ரீதியாக பாதிக்கப்பட்டவர்களாகவும் பலர் பாதிக்கப்பட்டனர். இவர்கள் பாதுகாப்புக் கருதியும், தம்மை பிற இயக்க அங்கத்தவர்களிடம் இருந்து காப்பாற்றுமுகமாகவும், இலங்கையைத் தவிர வேறொரு நாட்டினுள் குடியேறும் கட்டாயத்திற்கு உள்ளாக்கப்பட்டார்கள். பணவசதி உள்ளவர்கள் இலங்கையில் இருந்தும், இந்தியாவில் இருந்தும் அகதிகளாக, பல்வேறு நாடுகளுக்குள்ளும் புகுத்தப்பட்டார்கள்.

80-களின் பிற்பகுதியில், இந்தியாவின் சென்னை நகரில், பணவசதி இல்லாதவர்களும், பணத்தை பிரயாண ஏஜென்சிக்குக் கொடுத்துவிட்டு முன்னும் பின்னும் அலைபவர்களும் பல்லாயிரக்கணக்கில் காணப்பட்டார்கள்.

வறுமை காரணமாக, அன்றாட சீவியத்திற்காக இவர்களில் பலர், பல விதமான சமூகத்தைப் பாதிக்கக்கூடிய தொழில்களையும் செய்யும் படியான கட்டாயத்திற்கு உள்ளானார்கள். இவர்கள் அதை ஒரு குற்றமாக எப்போதும் கருதியதில்லை. இப்படியான அனுபவம் உள்ளவர்களின் பிரித்தானியக்குடியேற்றம் ஒரு பெரும் பிரச்சனையை உண்டாக்கிவிட்டது. அவர்கள் அதை இங்கும் செய்வதுதான், முழுத் தமிழ்ச் சமுதாயத்தையுமே மற்றவர்கள் ஏளனமாகப் பார்க்கும் படி வைத்து விட்டது.

அவர்களை ஐ.நா சபையின் அகதிகளின் விதிக்கமைய நாட்டினுள் விடவேண்டியுள்ளதென்றும் ஒரு அதிகாரி தெரிவித்தார். இன்று வரை சுமார் 50,000 விண்ணப்பங்கள் விசாரிப்பதற்காக காத்திருக்கின்றன.

1980-இல் இருந்து இன்று வரை சுமார் 11,400 தமிழர்கள் தஞ்சம் கோரி விண்ணப்பித்திருக்கின்றனர். இவற்றில் 1989 வரை அகதி நிலை **(Refugee Status)** பெற்றவர்கள் 49 பேர் மட்டுமே. தற்காலிக அனும தி **(Exceptional Leave to Remain)** பெற்று சுமார் 4700 பேரும், விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டோர் **(Rejected Cases)** சுமார் 100 பேர்களுமாவர், மிகுதியானோர் முடிவிற்காக காத்திருக்கின்றார்கள். அகதிகளின் விண்ணப்பங்கள் விசாரிக்கப்படும் வரையிலும், பின் அவர்களின் மேல் முறையீட்டினை முடிக்கும் வரையிலும், இரண்டு வருடங்களுக்கு ஐ.நா சபையின் அகதிகளின் சட்டம், அவர்களை இந் நாட்டில் இருந்து வெளியேற்றுவதை தடுக்கின்றது.

சுமார் 1000 அகதிகள் என விண்ணப்பித்தவர்களை விசாரித்ததில் இருந்து, அவர்களில் 80 சதவீதத்தினர் பொய்யான தகவல்களையே தருகின்றார்கள் என்றும் அவர்களுக்கு தமது நாட்டில்

## "நாற்பது செக்கன்களில் போலி அகதிகளை இனம்காண உதவும் புதிய முறை விரைவில் அறிமுகம்"

பிரிட்டனுக்குள் புகும் ஐந்து அகதிகளில் நால்வர் போலியானவர்கள் என்றும் இவர்கள் இந் நாட்டினுள் ஒரு நல்ல வாழ்க்கையை அமைத்து க்கொள்ளவே வருகின்றார்கள் என்றும் பிரித்தானிய அரசாங்கம் அண்மையில் கூறியுள்ளது. இந்த போலி அகதிகளால் வருடத்திற்கு 400 மில்லியன் பவுண்கள் செலவாகின்றதாகவும் உள்நாட்டு அமைச்சின் செயலாளர் கெனத் பேக்கர் தெரிவித்துள்ளார். மேலதிக 500 வேலையாட்கள், இந்த அகதிகளின் விண்ணணப்பங்களை விரைவாக விசாரிப்பதற்காக புதிதாக வேலைக்கு எடுக்கப்பட்டுள்ளார்கள்.

எல்லா நாட்டில் இருந்தும் அகதிகளாக இங்கு வருவோரின் தொகை, இந்தவருடத்திற்கு 55,000 ஆக, கடந்த வருடத்தில் இருந்து 25,000 அதிகரித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இந்த 55,000 பேரில், 44,000 பேர் தமது விண்ணப்பங்களுக்காக பொய்யான தகவல்களைக் கொடுக்கின்றார்கள் என்றும்,

எந்த பயமும் இல்லையெனவும், இந்நாட்டில் அவர்கள் வாழ எந்த உரிமையும் இல்லாதவர்கள் எனவும் இலண்டன் கீத்றோவை **(London Heathrow)** மையமாக வைத்து இயங்கும், ஆசிய சமூக தொடர்பு ஆலோசகரான சர்மா தெரிவித்துள்ளார். இரண்டு வருடங்களுக்கு சராசரியாக ஒவ்வோர் அகதிகள் என்று விண்ணப்பிப்பவர்களுக்கு, இந் நாட்டு வரிசெலுத்துவோரிடம் இருந்து சுமார் 2000 பவுண்கள், வைத்திய, குடியிருப்பு மற்றும் பராமரிப்புக்களுக்காக செலவாகின்றதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அதிகமான போலியான அகதிகள் இந்தியா, பாகிஸ்தான், உகண்டா, இலங்கை, சோமாலியா, வங்காளதேசம், கானா, சய்றே முதலிய நாடுகளில் இருந்து இங்கு வருவதாகவும் அக். 20-ஆம் திகதி சண்டே எக்ஸ்பிரஸ் தெரிவிக்கின்றது. பிரித்தானியாவுக்கு சுற்றுலாப் பயணிகளாக வருபவர்களினதும், மாணவர்களாக வருபவர்களினதும் அகதிகளாக மாறும்

வருவதாகவும் இப் பத்திரிகை மேலும் கூறுகிறது. ஒவ்வோர் கிழமையும் 1,100 அகதி விண்ணப்பங்கள் விண்ணப்பிக்கப்படுகின்றன.

உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் கெனத் பேக்கர் கடந்த மாதம் மெக்ஸிக்கோவின் எல்லைக் காவல் குடியேற்றக் கட்டுப்பாட்டினை பார்க்கச் சென்றார். அங்கு அவர் பிரித்தானியாவிற்கு வரும் உண்மையான அகதிகளையும், பொய்யான அகதிகளையும் இனம் காணும் வகையில் புதிய முறைகளை விரைவில் அறிமுகப்படுத்தப் போவதாகவும், பல


கெனத் பேக்கர்


சர்மா

**பார்த்திபன்**

அதிகாரிகளை ஆசிய நாடுகளின் விமானநிலையத்தில் இங்கு வருவோரின் கடவுச்சீட்டுக்களையும், மற்றும் பத்திரங்களை சோதனையிடுவதற்கும் அனுப்பியுள்ளதாகவும் தெரிவித்தார். இதனால் பொய்யான பத்திரங்களுடன் இங்கு வரும் அகதிகளின் எண்ணிக்கை குறைக்கப்படலாம் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

புதிய திட்டங்களுள், இங்கு வருவோரின் கைரேகைகளை விமான நிலையத்திலேயே வைத்து உடனே பதிவு செய்வதும் ஒன்றாகும். இக்கைரேகைகள் கொம்பியூட்டரில் பதிவு செய்யப்பட்டு, எந்தவிதமான குற்றங்களையும் இனங்காண பாவிக்கப்படும் என்றும் கூறப்படுகிறது. பல அகதிகள் பல்வேறு இடங்களில் ஒரே நேரத்தில் வருமான ஆதரவுப் **(Income Support)** பெற்றுவருவது கண்டுபிக்கப்பட்டதே இதற்குக் காரணமாகும். மற்றும் போலியானவர்களை ஏற்றிவரும் விமானங்களுக்கு குற்றப்பணங்களை அதிகரிப்பதும், வருமான ஆதரவுப்பணம், வீட்டு வசதிப்பணம் முதலியவற்றை காசாகக் கொடுப்பதை நிறுத்தி வவுச்சர் **(Vaucher)** மூலம் கொடுக்கும் திட்டம் ஒன்றும் விரைவில் அமுலுக்கு வர இருக்கின்றது;

கைரேகைகளை பதிவு செய்

வேறு பகுதிகளில் இருந்து இங்குவரும் அகதிகளை இனம் காணக்கூடியதாக இருக்கும் என்றும் பத்து விரல்களிலும் எடுக்கப்படும் பதிவுகள் ஐரோப்பாவில் எங்கு இருந்து ஒருவர் வந்திருந்தாலுமோ அல்லது குற்றங்கள் செய்திருந்தாலும், 40 செக்கன்களில் காட்டிக்கொடுத்து விடும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. இந்த முறை 1986-இல் சுவிற்சர்லாந்தில் அறிமுகப்படுத்தப்பட்டு பல தமிழர்கள் நாட்டைவிட்டு இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்டது தெரிந்ததே. சுவிஸில் இருந்து வெளியேற்றப்படுவர்களில் பலர் பிரித்தானியாவினுள் நுளைந்திருக்கின்றார்கள் என்றும், இங்கு இப்படியான ஒரு முறை அறிமுகப்படுத்தப்பட்டவுடன் பலர் இந்நாட்டை விட்டு வெளியேற்றப்படுவர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. ஐரோப்பிய கூட்டமைப்பு உருவாகியதும், இந்த கைரேகை முறை ஒரு பொதுவான நிலையத்தில் தனித்தனி கொம்பியூட்டர் கோப்புக்களாக **(Separated Computer Files)** சேகரித்து வைக்கப்படும்.

1992 இல் அமுலுக்குக் கொண்டுவரவிருக்கும் அகதிகளின் தனிப்பட்ட சட்டங்களின் பிரேரணை பற்றிய ஆய்வுகளுடன் இக்கட்டுரை அடுத்த இதழில் தொடரும்.

**With Compliments**

**T. Thiyagalingam**
18, Nighttingale Lane
London SW12 8TB
Tel: 081-675 1415

Contact for your needs in Insurance, Mortgage and Travel Requirements

www.tamilarangam.net



## Vanee Agency யின் ஆதரவுடன்

# T.K.Video & Enterprise

பெருமையுடன் வழங்கும் மாபெரும் படைப்பு




இதயக்கோயில்,
மௌனராகம், நாயகன்,
அக்கினி நட்சத்திரம்,
அஞ்சலி இன்று தளபதி
டைரக்டர் மணிரத்தினம்

திரைப்படம் தோன்றிய காலத்தில் இருந்து இன்றுவரை எத்தனையோ படங்கள் வெற்றிக் கொடி நாட்டி சரித்திரப்புகழ் பெற்று வந்துள்ளது. தென்னிந்திய திரைப்படத்துறையில் எத்தனையோ திரை நுணுக்கங்களை நாளுக்குநாள் திரையில் காட்டி, . விஞ்ஞானவளர்ச்சியாலும் முன்னேற்றப் பாதையில் வலம் வந்துகொண்டிருக்கும் இந்த வேளையில் தென்னிந்திய திரையுலகம் மட்டுமல்ல அகில இந்திய திரையுலகமே ஆச்சரியமாக பார்க்கும் அளவிற்கு திரைப்பட வரலாற்றிலேயே ஒரு மாற்றத்தை ஏற்படுத்தி திரையுலக மக்களும் திரைப்பட ரசிகர்களும் பிரமிக்கும் வகையில் பிரமாண்ட படைப்பில் வருகிறான், தளபதி.

**On 16th November 1991**
**At: Commonwealth Institute**
**Kensington High Street**
**(Opposite to Odeon Cinema)**
**London W8**
**Doors Open: 4.00 p.m.**
**Two Shows start: 4.30 p.m. and 7.00 p.m.**
**Tel: 071-603 4535**

எங்கள் சூப்பர் ஸ்டார் ரஜனிகாந். மலையாள திரைப்பட மாமன்னன் மம்முட்டி, சூப்பர் ஹீரோயினி பானுப்பிரியா; நவரச நாயகி சோபனா. இசைப்பிரம்மா இளையராஜா, இணையற்ற இயக்குனர் மணிரத்தினம், இவர் களது ஒற்றுமையும் ஒன்று திரட்டி தமிழ்பேசும் நல்லுலகமே வியக்கும் வகையில் பல கோடிரூபா செலவு செய்து படைத்திருக்கும் படைப்புத்தான் தளபதி.



**On 17th November 1991**
**At: Cannon Cinema**
**Walthamstow**
**Doors Open: 11.00**
**Show starts: 11.30**
**(Nearest Tube & BR: Walthamstow Central)**

ஐரோப்பிய வெண்திரை வானில் எத்தனையோ படங்களைத் திரையிட்ட முன்னணி திரைப்பட வெளியீட்டாளர் களான **T.K. Video** நிறுவனத்தினரின் தீபாவளி சிறப்புப் படம். இந்தப்படத்தை லண்டனில் திரையிடுவதற்காக மனதார பெருமையடைகின்றோம்.

**For further details:**
**Vanee Agency 081-471 8366**
**T.K. Video 081-672 2676**

T.K. Video வின் அடுத்த வெளியீடு குணா

*Europe & U.K Tamil Films distributors*
*Lune Internattional Home Videos*

www.tamilarangam.net



தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் நடந்த சில உண்மைகளை வெளிக் கொணரும் நோக்கில் வெளியான சிறந்த நாவலான புதியதோர் உலகத்தை நாம் ஐரோப்பாவில் உள்ள தமிழ் மக்களுக்காக எந்த வித கட்சியோ, அமைப்போ சார்பாக இல்லாமல் தொடர்ச்சியாக பிரசுரிக் கவுள்ளோம். வாசகர்களின் விமர்சனங்களை ஈழபூமி வரவேற்கின்றது.




சென்ற இதழ்த் தொடர்ச்சி..

அவர் பரந்த மார்பில் திட்டு திட்டாய் படர்ந்திருக்கும் கரிய ரோமங்கள் இடையிடையே பழுப் பேறிக்கொண்டு போவதை ஒரு வித கரிசனையோடு அவதானித் துவிட்டு அப்படியே இருந்தான் அவன். அவரே தொடர்ந்தார்.

"மனிதன் ஒரு அரசியல் மிரு கம் என்று சொல்வது எவ்வளவு பெரிய உண்மை தெரியுமா. எந்த மனிதனுக்கும் அரசியல் இல் லாமல் இருக்க முடிவதில்லை. ஆனால் இதை பெரும்பாலான மனிதர்கள் அறிவதில்லை. நான் என் காலத்தில் முனைப்பாக இருந்த தமிழ் சிங்கள மக்களின் ஐக்கியப்பட்ட சோசலிச போரா ட்டத்தை செய்ய வேண்டும் என்று அரசியலில் ஈடுபட்டேன். அதில் வெற்றிகாண முடிய வில்லை. நீ உன் தலைமுறைப் போராட்டமான தமிழீழ விடுத லையின் ஊடாக ஒரு சோசலிச புரட்சியை முன்னெடுக்க அரசி யலில் நுழைந்திருக்கின்றாய்"

அப்பா எப்பவும் இப்படி த்தான். எந்த விசயத்தையும் நேர டியாக புட்டு வைக்காது சுற்றி வளைத்துத்தான் வருவார். அதை யே எதிர்பார்த்து காத்திருப்பவன் போல் அவன் நெற்றியை சுருக் கிக் கொண்டு காதுகளை கூர்மை யாக்கினான். "இந்த இரண்டு போராட்டங்களுக்கும் இடையில் வடிவத்தில் மட்டும் தான் பேதம் இலட்சியத்தில் ஒன்றுதான். அது மாத்திரமல்ல முன்னையதன் அனு பவங்களை பின்னயது பற்றிச் செல்கிறது. பற்றிச் செல்லவும் வேணும். எனது காலத்தில் ஆயுத போராட்டம் என்றால் வெறும் வார்த்தைகளில் மாத்திரம் தான். நடைமுறையில் எங்கள் கட்சி ஒரு சொட்கண்ணை கூடக் கண்டிருக்காது. ஆனால் நீங்கள் அப்படியில்லை உன் அம்மாதான் பாவம். அவளுக்கு இந்த பரி ணாம வளர்ச்சியை ஜீரணிக்க முடியவில்லை அரசியல் என்றால் என்னைப் போல ஊர்வலம், பொதுக்கூட்டம் என்ற மட்டோடு நின்றுவிடுவாய் என்று எதிர்பாத் திருக்கிறாள். ஆயுதப் பயிற்சி என் பது அவள் கற்பனை பண்ணாத ஒன்று....ஆனாலும் நீ வீட்டைப் பற்றி கவலைப்படாதே. நான் எல்லாத்தையும் பார்த்துக்கொள்ளு றன். நீ ஒரு இயக்கத்தில இருக் கிறதெண்டா அதுக்கு முழுவதும் நம்பிக்கையுள்ளவனாக இருக்க வேண்டும்.... " சங்கர் கண்களை மூடிக்கொண்டு முகத்தை முழங் கால்களுக்குள் புதைத்துக் கொண் டான்.

அவனை அறியாமல் விழி யோரத்தில் தேங்கி நின்ற நீரை யாருக்கும் தெரியாமல் லாவகமாக சாரத்தில் துடைத்து விட்டான். அது கவலையால் வந்த கண்ணீர் அல்ல பெருமையால் வந்தது.

வெகு நேரத்தின் பின்பு வெளி யே வந்தார். அதே சமயம் அவ ரைத் தேடிக்கொண்டு ஒடோடி வந்த சிறுவன் ஒருவன் அருகில் வந்து ரகசியமாகப் பேசியதும் அவர் புரிந்து கொண்டவர் போல செருமிக்கொண்டு கூறி னார்.

இந்தியா செல்ல படகு வந்திட்டுதாம். அந்தச் சிறுவ னோட எல்லாரையும் போகட் டாம்.

அவனுக்கு திக்கென்றது.

ஏமாற்றத்தால் மனம் சலித் தது.

நாதனை இன்னும் காணோம்.

எல்லோரும் அவசர அவசர மாக எழுந்து தாம் கொண்டுவந்த அந்த பாசல்களைத் தேடி கையி லெடுத்தார்கள். அந்த சிறுவன் அவர்கள் பரபரப்பையும் சப்தத் தையும் அடக்கி அமைதியாக

மூன்று ஒட்டிகளில் ஒருவர் வண்டியின் பின்புறம் என்ஜி னோடு இணைந்த கானாகம் பியை பிடித்துக் கொண்டு வேகத்தை கூட்டிக் குறைத்துக் கொண்டு நின்றார். மற்றொருவர் அவருக்கு உதவியாக அவர் அரு கிலே நின்று அவர் பணிக்கும் ஒவ்வொரு வேலையையும் செய்து கொண்டிருந்தார். மூன்றா மவர் முன் அணியத்திற்கு வந்து ஏதும் படகு தென்படுகிறதா என்று அந்த கும் இருட்டிலும் பார்வையைக் கூராக்கி துளாவிக் கொண்டிருந்தார்.

அடேய் கவனமா பார்! ஏதும் புள்ளி தெரியும்.

இங்கின தான் திரிவான்கள்

பின்னாலிருந்த ஒட்டி சற்றைக் கொருதடவை குரல் கொடுத்தார்.

சங்கர் படகின் நடுவில் இரு ந்து கொண்டு படகின் ஒவ்

அந்த இளைஞர்கள் இது ஒன்றையும் கண்டு கொள்ள வில்லை அவர்கள் தங்களுக்குள் நெருக்கமாகி விட்டதை காலை நேர குருவிகளின் கீச்கீச் ஒலியில் ஒருவர் மாறி ஒருவர் சம்பாசித் துக் கொண்டிருப்பதிலிருந்து புல ப்படுத்திக் கொண்டார்கள். முற் றத்தில் கால்களை நீட்டியும், மல் லாந்து படுத்துக் கொண்டும் அவர்கள் மனம்போன போக்கில் பேசிக்கொண்டிருந்தார்கள். வெவ் வேறு மாவட்டங்களைச் சேர்ந் தவர்கள் என்பது ஒவ்வொரு வருடைய பேச்சுவழக்கில் புரிந்து கொள்ளக்கூடியதாக இருந்தது. கடல்பயணமே அவர்களுக்கு பெரிய உறுத்தலாக இருந்தது.

அது பற்றியே அடுத்தடுத்து பேசினார்கள். சங்கர் நாதனை எதிர் பார்த்து மனதுக்குள் புளுங் கிக் கொண்டிருந்தான்.

நேரம் செல்லச்செல்ல நிர் மலாவை சந்திக்கும்படி நாதனை அனுப்பியிருக்க வேண்டாம் என்ற சலிப்பு அவனுக்கு ஏற்ப டத் தொடங்கியது.

உள்ளேயிருந்து இருமிக் கொண்டிருந்த அந்த வீட்டுக்காரர் போனான். அந்தப் பணியில் அவன் நீண்ட காலமாக உழை த்த அனுபவம் அப்படியே தெரிந் தது.

சங்கர் சோர்ந்து குழம்பிப் போய் அவர்களைப் பின் தொடர் ந்தான்.

கடல் அலைகளின் ஆக்ரோச மான ஒலி இப்போது மிக அண் மையில் கேட்டது. கடல் அலை களை கிழித்துக் கொண்டு அசுர வேகத்தில் அந்த படகு பறந்தது. ஒவ்வொரு அலையும் படகின் அணியத்தில் முட்டி எம்பித் தள்ளும்போது உள்ளே இருந் தவர்கள் கையில் அகப்பட்டதை இறுகப் பற்றிக் கொண்டு மேலே பாய்ந்து ஒருவரோடோருவர் முட்டிமோதி துள்ளி விழுந் தார்கள். மூன்று என்ஜின்கள் பொருத்தப்பட்ட அந்த விசைப் படகு புறப்பட்டபோது ஒரு என்ஜின் மாத்திரமே முடுக்கி விடப்பட்டது. ஐந்து நிமிட நேரத்தின் பின் அடுத்த இரு என்ஜின்களும் முடுக்கி விடப் பட்டபோது வண்டியில் உள் ளோர் நிலை கொள்ளாமல் தவித் தார்கள்.

தன்னை அசுவாசப்படுத்த கடு மையாக போராடிக் கொண்டிரு ந்தான்.

காங்கேசன்துறை வெளிச்ச வீட்டு விளக்கு வெளிச்சம் தெளி வாக இன்னும் மின்னிக் கொண் டிருந்தது. தரையைக் காட்ட அது தவிர வேறு எந்த அடையாளமும் இல்லாமல் எங்கும் ஒரே கடல் பரப்பு.

முன்புறமிருந்த இளைஞன் ஒருவன் வாந்தி எடுத்து கலவரப் படுத்துவதும் அவன் அருகிலி ருந்த மற்றிருவரும் அருவருப்பால் முகத்தை சுழிப்பதும் அந்த கடும் இருளிலும் துல்லியமாகத் தெரிந் தது. ஒட்டிகள் அதுபற்றி எந்த சிரத்தையுமின்றி வேறு படகுகள் கண்களில் தென்படுகிறதா என்று பார்வையைக் கூராக்கிக் கொண் டிருந்தார்கள்.

திடீரென்று அந்தப் படகின் வேகம் சிறிது சிறிதாக குறைந்து கொண்டு போனது. அணியத்தின் மேல் நின்ற ஒட்டி கலவரப்பட்டு திரும்பினான். கானாகம்பியை பிடித்துக்கொண்டு நின்ற ஒட்டி இடது கரை என்ஜினைப் பரி தாபமாக பார்த்துக் குழம்பினார். அந்த என்ஜின் புட்புட் என்ற சத்தத்தோடு இயங்க மறுத்தது.

"அடேய் ! நாற்பத்து ஒன்று நின்றுட்டது. என்ன அறப்போ தெரியாது"

(தொடரும்)

# பேச்சுவார்த்தைக்கு அழைப்பு!

(ஆனந்த சங்கர்)

படையினரின் முற்றுகையை தவிர்த்து மக்களை அழிவில் இரு ந்து காப்பது புலிகளின் அரசி யலில் தான் தங்கியுள்ளது என புளொட், ஈரோஸ், ரெலோ இய க்கப் பிரமுகர்கள் அறிக்கை ஒன்றை விடுத்துள்ளனர். இதில் புளொட் இயக்கப் பேச்சாளர் கர வை கந்தசாமி மேலும் தெரி விக்கையில் பெரும் அழிவை நோக்கி இருக்கும் பொது மக் களின் நலனுக்காக புலிகள் ஆயு தத்தை கீழே வைத்து விட்டு பேச்சுவார்த்தைக்கு முன் வரவே ண்டும் என கூறியுள்ளார்.

# வவுனியாவுக்கு பஸ் சேவை

(கொழும்பு கார்த். 14

வவுனியா நகர்ப்புற பஸ் சேவையை அபிவிருத்தி செய்யு முகமாக உடனடியாக ஐந்து பஸ் களை அனுப்புமாறு புளொட் இயக்க தலைவர் சித்தார்த்தன், உபதலைவர் கரவை கந்தசாமி அகிய இருவரும் போக்குவரத்து அமைச்சர் விஜேபால மென் டிஸை கேட்டுள்ளனர். மேலும் இவர்கள் வவுனியா வீதிகளி னதும், ரயில் நிலையத்தினதும் அவல நிலைபற்றி அமைச்சருடன் கலந்து ஆலோசித்தனர். அமை ச்சர் உடனடியாக ஆவன செய் யுமாறு சம்பந்தப்பட்ட அதிகாரி களைப் பணித்துள்ளார்.

# புலிகள் வீழ்ச்சியா?

(விசேட நிருபர் விசுவன்)

இவ் வாரம் வெளிவந்த புரொண்ட்லைன் சஞ்சிகையில் ஆனையிறவுத் தோல்வியைத் தொடர்ந்து இவர்கள் தீவுப் பகுதி யையும் தற்போது இழந்து விட் டதையும் சுட்டிக்காட்டி புலிகள் தற்போது வீழ்ச்சி அடைந்து வரு வதாக கூறியுள்ளது. இத் தோல் விக்கு முக்கியமாக இரு காரண ங்களை இது சுட்டிக் காட்டியு ள்ளது. தற்போது இலங்கையில் நடக்கும் தாக்குதல்கள் எதையும் இந்தியா கண்டிக்காதது ஒரு காரணம் என்றும் தமிழ் நாட்டில் புலிகளுக்கெதிராக தீவிரமாக பொலீஸார் நடவடிக்கை, வெடி மருந்து, ஆயுதங்களை இலங் கைக்கு கடத்துவது கடினமாக இருப்பது அடுத்த காரணம் என்று கூறுகின்றது. இக் கட்டு ரையில் மேலும் ஆனையிறவுத் தாக்குதலின் போதும் மற்றும் சில வன்னிப் பிராந்திய தாக்குதலின் போதும் மாத்தையாவின் செயற் பாடு மிகவும் மந்தமாக இருந்த காரணத்தினால் இவரின் இட த்தை பால்றாஜ் என்பவர் நிரப் பியுள்ளதாகவும், மாத்தையாவை ஆவணிக்குப்பின் காணமுடிய வில்லை என்றும், இலங்கைத் தமிழரின் தகவல்களை ஆதார மாக வைத்து இக் கட்டுரையை வெளியிட்டுள்ளது.

# விளம்பரங்கள் கோரப்படுகின்றன

நான்காம் பக்க ஈழ பூமி விளம்பரப் பகுதியில் பிரசுரிப்பதற்கு வாசகர்களிடம் இருந்து, தேவை, விற்பனைக்கு, மணமகன் தேவை, மணமகள் தேவை போன்ற விளம்பரங்கள் கோரப்படுகின்றன.

இக்கூப்பனுடன் அனுப்பப்படும் விளம்பரங்களுக்கு விசேட கட்டணம் அறவிடப்படும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



16.11.91 சனிக்கிழமை நடைபெறவிருக்கும்

# தமிழ் அவைக்காற்றுக் கலைக்கழகத்தின்

# நாடகம்: மன்னிக்கவும்

நொந்து போய்க் கூலி வேலை செய்யும் ஒருவனை தமது ஆடம் பரமான வீட்டுக்கு விருந்துக்கு அழைத்து, பார் நாங்கள் எப்படியிருக்கிறோம் என்று தம்பட்டம் அடிக்கும் பல தம்பதிகளை லண்டனில் காணலாம்.

ஒடுக்கு முறை நிலவும் நாட்டில் சுதந்திரமான எழுத்தாளன், பல விதமான அச்சுறுத்தல் மத்தியில், கூலியாளாக வேலை செய்யும் இக்கட்டிற்கு ஆளாகிறான். அவனை விருந்துக்கு அழைக்கும் நண்பன் இந்திரன், நீ ஏன் இப்படி அதிகார வர்க்கத்துடன் சேர்ந்து வசதியாக இருக்கக் கூடாது என்று (புத்திமதி?) கூறுகிறான். இப்படித்தான் எதிர் வரும் சனிக்கிழமை மேடையேறும் 'மன்னிக்கவும்' நாடகம் ஆரம்பமாகிறது. க.பாலேந்திரா நெறிப்படுத்தும் இந்நாடகத்தில் இந்திரனாக, மனோகரன் மனுவேற்பிள்ளையும், மனைவி சசியாக, ஆனந்தராணி பாலேந்திராவும் அவர்கள் வீட்டுக்கு வரும் விருந்தாளி எழுத்தாளனாக கே. கிருஷ்ணராஜாவும் நடிக்கிறார்கள்.

அன்றைய தினம் நடைபெறும் கானசாகரம் இசைநிகழ்ச்சியில் ஈழத்துக் கலைஞர்கள் மகாகவி, நீலவாணன், சண்முகம் சிவலிங்கம், சேரன் போன்றோரது கவிதைகளை, மா.சத்தியமூர்த்தியும், வாசுகி இராஜசிங்கமும் இசையமைத்துப் பாடுகிறார்கள். இசைக்கலைஞர்களை நிர்மலா நெறிப்படுத்துகிறார்.

சந்திரசேகர், சங்கர், ஆகியோர் வழங்கும் வயலின் இசை இசைப்பிரியர்களுக்கு ஒரு விருந்தாக அமையும். இவர்களுக்கு பவானி சங்கர், முத்துசிவராஜா, ஆனந்தன், சிதம்பரநாதன் ஆகியோர் தாள வரத்தியங்கள் வாசிப்பார்கள்.

லண்டனில் 35க்கு மேற்பட்ட மேடையேற்றங்களை நடாத்திய தமிழ் அவைக்காற்று கலைக் கழகம் இலங்கையில் இயங்கிய காலத்திலிருந்தே, தமிழ் கலைகளுக்கு ஒரு நல்ல ரசிகர் கூட்டத்தை திரட்டுவதில் பெரும் பங்கை வகித்து வருகின்றது. இவர்களது புகழ்பெற்ற நாடகங்களான கண்ணாடி வார்ப்புகள், மழை, யுகதர்மம், முகமில்லா மனிதர்கள், என்றும் ரசிகர்கள் மனதில் நிலைத்து நிற்பவை. இப்பொழுது மேடையேறும் மன்னிக்கவும் நாடகம், முதன்முறையாக மேடையேறிய போது, லண்டனில் பல ரசிகர்களைக் கவர்ந்துள்ளது. நகைச்சுவையுடன் கூடிய உரையாடல்களுடன், எமது அன்றாட வாழ்வில் நிகழும் சம்பவங்களை ரசிகர்கள் இனம் கண்டு கொள்ளுமாறு எழுதப்பட்ட மனிதநேயம் மிகுந்த இந்த நாடகம் வோல்த்தம் பொரஸ்ட் தியேட்டரில் பல ரசிகர்களைத் திருப்திப் படுத்தும் என நம்பலாம்.

---

### ஓமந்தையில்...

1ம் பக்கத் தொடர்ச்சி

வடிக்கைகட்கு புளொட் இயக்கத்தினர் இராணுவத்துடன் சேர்ந்து இயங்குவதாக கொழும்பிலிருந்து வரும் செய்திகள் கூறுகின்றன. இராணுவம் தொடர்ந்து புலிகள் மீது தாக்குதல் நடாத்தும் அதேவேளை புலிகளும் இராணுவம் மீது பதுங்கியிருந்து தாக்குதல்களை நடாத்திவருகிறது. வவுனியா மன்னார்ப்பாதையில் உள்ள இராணுவத்தின் காவல் அரண்கள் மீது பதுங்கித் தாக்குதல்களையும் முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு பகுதிகளில் நேரடி மோதல்களிலும் ஈடுபட்டு வருகின்றது.

### தீவுப்பகுதியில்....

1ம் பக்கத் தொடர்ச்சி

முடியும் என பாதுகாப்பு வட்டாரங்கள் அறிவித்துள்ளது. வடக்கே ஏற்பட்டிருக்கும் இந்தப் புதிய மாற்றத்தால் புலிகளுக்கான விநியோகம் தடைப்பட்டுள்ளதாக நம்பிக்கையான வட்டாரங்கள் அறிவிக்கின்றன.

### கோழியகுளம்....

12ம் பக்கத் தொடர்ச்சி

வைத்து பராமரிக்க நடவடிக்கை எடுத்துள்ளதாயும் இவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

மேலும் வவுனியாவில் அரச தரப்பினர் இச் செய்தியை ஊர்ஜிதம் செய்ததுடன் எல்.ரீ.ரீ யினர் யாழ்ப்பாணப் பகுதியில் வசிப்பவர்களிடம் வீட்டிற்கு 3 பவுண் நகை தரவேண்டும் என கேட்டதை அடுத்து பலர் காட்டுப் பகுதியால் வவுனியாவுக்கு அகதிகளாக வந்துள்ளதாகவும் தெரிவித்துள்ளன. நாளொன்றுக்கு சுமார் 100 குடும்பங்கள் இப்படி இடம் பெயர்வதாயும் இவர்களில் பலர் விடுதலைப் புலிகளினால் பணம் கேட்டுத் துன்புறுத்தப்பட்டவர்கள் என்றும் இவர்கள் தம் சகல உடமைகளையும் கைவிட்டு விட்டு வந்ததாக கொழும்பு பத்திரிகையாளரிடம் கூறியுள்ள னர்.

### இந்திய சதியா...

1ம் பக்கத் தொடர்ச்சி

மேற்கொண்ட காமினி மீதும், ஒப்பந்தத்திற்கு ஆதரவு அளித்த லலித் மீதும் இந்தியாவுக்கு எப்பொழுதுமே ஒரு நன்மதிப்பு உண்டு. இம்மகாநாடு இடைநிறுத்தத்திற்கு பிரேமாவே காரணம் என லலித்தும் காமினியும் தற்போது கூச்சல் போடுகிறார்கள்.

நவம்பர் 2ஆம் திகதி லலித்தின் பன்னல கூட்டத்தில் நடந்த குண்டு வெடிப்பில் பிரேமாவுக்கு சம்பந்தம் உள்ளதாக லலித்-காமினியின் அதிருப்தியாளர் குழு அறிக்கை விடுத்துள்ளது. உக்கிரமடைந்து வரும் இந்தப் போரினால் இலங்கை அரசியலில் பல மாற்றம்கள் நிகழலாம் என அரசியல் வட்டாரங்கள் அறிவிக்கின்றன. அதுமட்டுமல்ல இப்போரில் பல முக்கிய புள்ளிகளின் தலைகள் உருளலாம் என இலங்கையிலிருந்து வரும் செய்திகள்


RANJIT & COMPANY

SOLICITORS

Tel: 081-767 9717
Fax: 081-767 9684

1st Floor,
176, Mitcham Road,
Tooting,
London SW17 9NJ


Freehold
Leasehold
Conveyancing
Residential & Commercial
FIXED FEE

COMPETITIVE QUOTES BY PHONE
7 DAYS A WEEK
FOR SPEEDY CONVEYANCING PHONE NOW

IMMIGRATION
MATRIMONIAL & INJUNCTION WORK
LANDLORD & TENANT DISPUTE
ACCIDENT CLAIMS
LICENSING

HOUSING PROBLEM
MORTGAGE ARREARS
HARRASSMENTS
TENANCY AGREEMENT
NOTICE TO QUIT

REPRESENTATION AT POLICE STATION IS COVERED BY LEGAL AID ALL CRIMINAL COURT WORK UNDER TAKEN
PHONE 081-767-9717

# புதைகுழிப் பாடல்.

அவன் தனியே;
அவர்களோ மூவர்
முகம் தெரியாத இருள்
அவர்கள் மனதைப் போல

தன்னுடைய புதை குழியைத்
தானே வெட்டும் அவலம்
நேர்ந்த போது
அவன் என்ன உணர்ந்திருப்பான்
என்பது
வார்த்தைக்குள் அகப்படாத குரூரம்.

அந்தப் புதைகுழியின் மேல்
காற்றில்
உறைந்து போயிருக்கின்றன
அவன் இறுதியாகச்
சொன்ன வார்த்தைகள்....

காற்று அவற்றைக்
கொண்டு செல்லாது;
மழையும் சூரியனும்
கிட்டவும் நெருங்கா

அவன் சொல்லாத வார்த்தைகளோ
மண்ணுட் போய்
மண்ணிருந்து மரத்துட் போய்
அங்கிருந்து கிளைக்கு
கிளையில் இருந்து இலைக்கு
இலையிலிருந்து காற்றில்
இடையறாமல்
அலையாக எழுந்து கொண்டிருக்கிறது...

அந்தப் புதைகுழியின் மேல்
பிசாசு இல்லை;
தெய்வமும் இல்லை
நினைவுச் சின்னம் எனவும்
ஒன்றிலலை

ஆளரவமற்ற இரவுத் தெருவின்
ஒற்றை விளக்குப் போல
உதிரியாய் ஒரு பட்டிப் பூ
அதன் மீது
காலம் தன்னுடைய கொடூர
நகங்களைப் பதித்துள்ளது.

அவனுடைய இறுதி வார்த்தைகளில்
இருந்து
நமது தேசத்தின் உயிர்......

*நன்றி, சேரன் கவிதைகள் தொகுப்பில் இருந்து*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# நாடு திரும்பிய அகதிகளுக்கு நடந்த சித்திரவதை

இங்கிலாந்தில் அகதிகளாக குடியேற விடுத்திருந்த விண்ணப்பங்கள் தள்ளுபடி செய்யப்பட்டதைத் தொடர்ந்து 6 இலங்கைத் தமிழர்கள், 1988 பெப்ரவரியில் இலங்கைவிற்கு வலுக்கட்டாயமாக திருப்பி அனுப்பப்பட்டனர். தற்போது உள்ள குடியேற்றச் சட்டப்படி, அகதிகளாக குடியேற விண்ணப்பம் அளித்து, அது நிராகரிக்கப்பட்டால் அவர் தனது நாட்டிற்கு திருப்பி அனுப்பப்படும் முன்பு, மேல்முறையீடு செய்யும் உரிமை அவருக்கு கிடையாது. இவர்களைப் பொறுத்தவரை, இவர்களுக்காக வழிகாட்டியவர்கள், இவர்கள் சார்பாக மேல்முறையீடு செய்தனர். 1989 ஏப்பிரல் 19ம் திகதி அன்று அந்த மனுவும், குடியேற்ற உயர் அதிகாரிகளால் (I.A.A) தள்ளுபடி செய்யப்பட்டு விட்டது.

வடக்கு, கிழக்கு சமீபத்தில் தெற்கு இலங்கைப் பகுதியில் பல வருடங்களாக தொடர்ந்து இலங்கை இராணுவத்தால் செய்யப்பட்டு வரும் கடுமையான மனித உரிமை மீறல்கள் பற்றி அம்னஸ்டி இன்டர் நேஷனல் கவலை தெரிவித்து வந்துள்ளது. 1989 ஜூலை ஒப்பந்தத்திற்கு

பிறகு வடக்கு, மற்றும் கிழக்கு இலங்கையில் இந்திய அமைதிப் படையினர் இத்தகைய மீறல்களில் ஈடுபடுவதாக குற்றச்சாட்டுகள் வந்துள்ளன. முதலில் வடக்கில் மட்டும் இருந்த 'மாயமாய்' மறைந்தார்கள் நாடுபூராவும் பரவியுள்ளனர். நாடெங்கும் பரவலாக சட்டத்திற்கு புறம்பான கொலைகளும் காவலில் சாவுகளும் சித்திரவதைகளும் அதிகரித்துள்ளதாக புகார்கள் வந்துள்ளன.

அந்த ஆறு தமிழ் அகதிகளை இங்கிலாந்தில் இருந்து திருப்பி அனுப்பப்படும் சமயம் அம்னஸ்டி இன்டர் நேஷனல் அவர்கள் திருப்பி அனுப்பப்பட்டால் அவர்கள் கடுமையான மனித உரிமை மீறல்களுக்கு ஆட்படுத்தப்படுவார்கள் எனக் கூறி அவர்களை அனுப்ப வேண்டாம் என்று அரசைக் கேட்டுக் கொண்டது. 1987 ஜூலை இந்திய இலங்கை ஒப்பந்தத்திற்குப் பிறகு அங்கு தொடர்ந்து நிலவிவரும் மனித உரிமைகள் பற்றிய தகவல்களைக் கொடுத்து இவர்கள் திருப்பி அனுப்பப்பட்டால் அவர்கள் கடுமையான மனித உரிமை மீறல்களைச் சந்திக்க வேண்டி வரும் என்று பலமுறை அம்னஸ்டி உட்துறைக்கு எழுதியிருக்கிறது.

திருப்பி அனுப்பப்பட்ட ஆறு பேரில் இருவர் நாடு திரும்பியவுடன் கைது செய்யப்பட்டு தமிழீழ விடுதலைப் புலிகளுடன் தொடர்பு உள்ளதாகச் சந்தேகிக்கப்பட்டு, சித்திரவதை செய்யப்பட்டு உள்ளனர்.

அவர்களில் ஒருவருக்கு நேர்ந்த கதி விபரமாகக் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது. மூன்றாவது நபர் மூன்று மாதம் காவலில் வைக்கப்பட்டு துன்புறுத்தப்பட்டுள்ளார்; மற்றொருவர் யாழ்ப்பாணம் செல்லும் வழியில் மேலும் பலருடன் இந்திய அமைதிப் படையினரால் சுற்றி வளைக்கப்பட்டு சாலையோரம் 10

> " முகமூடி மனிதர்கள் முன் கொண்டு சென்றபோது அதில் ஒருவன் தலையசைத்தான்"

மணிநேரம் உட்கார்த்தி வைக்கப்பட்டார். அங்கு நிறுத்திவைக்கப்பட்டவர்களை மூடப்பட்ட வாகனங்களில் இருந்து கொண்டு முகமூடியுடன் சிலர், அவர் விடுதலைப் புலிகளைச் சார்ந்தவர் என்று சுட்டிக் காட்டிக் கொண்டு இருந்தனர். அப்படி அடையாளம் காட்டப்பட்டவர்கள் எடுத்துச் செல்லப்பட்டுவிட்டனர்.

வைத்திலிங்கம் ஸ்கந்தராஜா

1988 பெப்ரவரியில் கொழும்புக்குத் திரும்பிய வைத்திலிங்கம் ஸ்கந்தராஜா யாழ்ப்பாணம் பயணப்பட்டார். 1987 ஜூலை ஒப்பந்தத்திற்கு பின்னர் யாழ்ப்பாணப் பாதுகாப்பு இந்திய அமைதிப் படையின் வசம் இருந்தது. ஒரு மாதத்திற்குப்பிறகு காய்கறி வாங்க கடைக்குச் சென்ற அவரை இந்திய அமைதிப்படையினர் அழைத்துச் சென்று காவலில் வைத்தனர். அச்சமயம் வேறு சில தமிழ் இளைஞர்களும் சிறுவர்களும் அங்கு அடைத்து வைக்கப்பட்டிருந்தனர். இந்திய அமைதிப்படைகளுக்கு உளவாளிகளாக செயல்படும் முகமூடி அணிந்திருந்த மூவர் முன்பு, இவர் கொண்டு போய் நிறுத்தப்பட்டார். இவரை அந்த முகமூடி மனிதர்கள் முன்பு கொண்டு சென்ற போது அதில் ஒருவன் தலையை அசைத்தான். இந்திய அமைதிப் படையின் முகாமாகமாறி விட்டிருந்த யாழ்ப்பாணத்தில் இருந்த ஒரு வீட்டிற்கு வைத்திலிங்கம் இந்திய அமைதிப்படை வாகனம் ஒன்றில் அழைத்துச் செல்லப்பட்டார். அதன் பிறகு நடந்தது என்ன என்பதை பற்றி அவரே விவரிக்கின்றார்.

'அங்கு போனவுடனேயே அவர்கள் என்னை அடிக்கத் துவங்கினர். இதற்கெனவே அவர்கள் ஒரு அறையை வைத்திருந்தனர். மூன்று மணிநேரம் விட்டு விட்டு அடிக்கப்பட்டேன். ஐந்து சிப்பாய்கள் என்னை அடித்தனர். அதிகாரிகள் தட்டுப்படவில்லை. ஓரிடத்தில் என்னை நிற்க வைத்தனர். அவர்கள் என்னைச் சுற்றி வட்டமாக நின்று கொண்டனர். முன்னால் ஓரிருவர் பின்னால் மற்றவர்கள். முன்னால் இருந்தவர் என்னைக் கேள்விகள் கேட்டார். தமிழில் தான் பேசினார். யார் தமிழீழ விடுதலைப் புலிகளைச் சேர்ந்தவர்கள், ஆயுதங்களை அவர்கள் எங்கு மறைத்து வைத்து இருக்கிறார்கள் என்று வினாவினார். அவர் சில பெயர்களைக் கூறினார். அவர்களை எனக்குத் தெரியவில்லை. யாழ்ப்பாணத் தமிழர்களாக இருக்கும் என நான் யூகித்தேன். 'நீ ஒரு விடுதலைப் புலி என்பது எங்களுக்குத் தெரியும் உங்கள் தலைவர் பிரபாகரன் எங்கே இருக்கிறார்? உன்னை இங்கு அடைத்து வைத்தால் யாருக்கும் தெரியப்போவதில்லை என்று கத்தினார்' எல்லோரும் சேர்ந்து கத்தினார்கள். அது ஹிந்தியில் இருந்ததால் எனக்கு அது சரியாகப் புரியவில்லை. அது என்னை திட்டிய திட்டுக்களாக இருந்ததால் அது புரிய வேண்டிய தேவையும் இல்லாமல் இருந்தது. அவர்கள் என்னை அடிக்கத் துவங்கினர். அவர்கள் கைகளில் மணலால் நிரப்பப்பட்ட பி.வி.சி குழாய்கள் இருந்தன. இது வளைந்து கொடுத்தது. அதே சமயம் கனமாகவும் இருந்தது. மிகவும் பயங்கரமாக வலித்து. நான் வலி தாங்காமல் அலறினேன்; அழுதேன்.

> "அவர்கள் கைகளில் மணலால் நிரப்பப்பட்ட பீ.வீ.சி குழாய்கள் இருந்தன. "

நான் இங்கிலாந்தில் இருந்ததால் எனக்கும் விடுதலைப் புலிகளுக்கும் சம்பந்தம் இல்லை என்று கூறினேன். நான் அகதியாகக் குடியேற மனுச் செய்திருந்தேன் என்று கூறும் தைரியம் எனக்கில்லை. இதனால் எந்தப் பயனும் விளைந்து விடவில்லை. கழுத்திலும் தோள்பட்டையிலும் மாறி மாறி அடித்தனர். என் முதுகிலும், பக்கவாட்டிலும் அடி தொடர்ந்தது.

என் பின்புறமும் அடித்தனர். இதனால் நான் முன் சரிந்தேன். ஒவ்வொரு முறையும் முன்னால் இருந்தவர்கள், அடிப்பதற்கு வசதியாக என் பின் புறத்தை திருப்பிக் காட்டினார்கள். நான் பல முறை கீழே விழுந்தேன். ஒவ்வொரு முறையும் அவர்கள் பல முறை கத்தினார்கள். எழுந்திரு என்பதாக இருக்கலாம். என்னை உதைத்து காலால் நசுக்கினர். அவர்களின் கால்களில் இராணுவ சப்பாத்துக்கள் இருந்தன. நான் மிகவும் பயந்திருந்தேன். நான் அவ்வளவு தான் என்று முடிவு செய்து விட்டேன். நான் அப்பாவி ஒன்றும் அறியாதவன் என்று மீண்டும் மீண்டும் கூறினேன். எனக்கு விடுதலைப் புலிகள் பற்றி எதுவும் தெரியாது. ஆனாலும் அவர்கள் தொடர்ந்து கேள்வி கேட்டுக் கொண்டே இருந்தனர் என்னைக் கேள்வி கேட்டவர்களில் ஒருவர் ஒரு சமயம் 'நாங்கள் உன்னை பாதுகாக்க வந்திருக்கிறோம். நீங்கள் என்னடாவென்றால், எங்களைக் கொல்கிறீங்க' என்பது போல கத்தினார்.


காவலில் வைக்கப்பட்டபோது வைத்தியலிங்கம் வேறு ஆறு தமிழ் இளைஞர்களுடன் 9 க்கு 10 அடி என்ற அளவில் உள்ள அறையில் அடைக்கப்பட்டிருந்தார். அதற்கு பிறகு அடுத்த 7 நாட்களும் அவர் மூன்று முறை இவ்வாறு அடிக்கப்பட்டிருக்கிறார். அவரது குடும்பத்தினரது விவரத்தையும் அவர்கள் கேட்டிருக்கின்றனர். அவரது குடும்பத்தினர் கடைசியில் எப்படியோ அவரது விடுதலையைப் பெறுவதற்கு முன்பு 10 வாரங்களுக்கும் மேலாக காவலில் அவர் இருந்திருக்கிறார்.

# நடுவானில் தொலைபேசி

இனிமேல் சிங்கப்பூர் எயர் லைன்ஸ் விமானத்தில் பறக்கும் போதே நீங்கள் தொலைபேசியில் பேசலாம். சுமார் 6,00,000 டாலர் செலவில் போயிங் 747 விமானத்தில் ஆறு தொலைபேசிகளை தற்போது பொருத்தியுள்ளார்கள். இன்னும் இரண்டு ஆண்டு காலத்தில் நீண்ட தூரம் பயணம் செய்யும் விமானங்களுக்கும் இதனைப்பொருத்த உள்ளார்கள். வான் தொலைபேசி (ஸ்கை போன்) என்று கூறப்படும் இந்த தொழில் நுட்பம், பிரிட்டிஷ் டெலிகொம், நோர் வீஜியன் டெலிகொம், சிங்கப்பூர் டெலிகொம் ஆகிய மூன்று நிறுவனங்களின் கூட்டு முயற்சியால் இயங்குகிறது. இத் தொலை பேசிக்கு பிரயாணிகளிடமிருந்து கிறடிட் கார்ட் மூலம் நிமிடத்துக்கு 8.80 டாலர் மட்டுமே அறவிட உள்ளார்கள். இத் தொலை பேசிக்கு வெளியில் இருந்து தொடர்பு கொள்ளக்கூடிய வசதி இருந்தும் பாதுகாப்புக்காரணங்களுக்காகவும் பயணிகளை தொந்தரவு செய்யும் என்ற காரணத்தினாலும் இவ் வசதி தடைசெய்யப்பட்டுள்ளது.

# இறக்க விரும்பாத மனிதன்

தன் தலையை வெட்டி குளிர் பெட்டியில் உறையவைக்க விரும்புகிறார் அமெரிக்க நாட்டைச் சேர்ந்த தோமஸ் டொனால்ட்ஸன். 47 வயதே நிரம்பிய டொனால்ட்ஸன் மூளைக் கட்டி எனும் பயங்கர புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ளார். இவரது நோய் இவரது இறப்பின் பின் மூளையை அழிப்பதற்கு முன், அதாவது இவர் இறப்புக்கு முன் தனது தலையை வெட்டி உறைய வைப்பதற்கு கலிபோர்னியா நீதி மன்றத்தில் அனுமதி கேட்டுள்ளார். புற்றுநோய் குணமடையக் கூடிய சந்தர்ப்பம் வரும் போது இத் தலையை இன்னுமொருவருக்குப் பொருத்துவதன் மூலம் தனது பழைய நினைவுகளுடன் மீண்டும் உயிர் வாழ முடியும் என்ற ஆசையுடனேயே இவர் இப்படித் தன் தலையை குளிர் பெட்டியில் உறையவைக்க விரும்புகிறார்.




இப்படி இறந்த பின்னும் (?) உயிர் வாழ முடியும் என விஞ்ஞானிகள் கூறியதை அடுத்தே டொனால்ட்ஸன் இம் முடிவுக்கு வந்துள்ளார். என்ன உங்களுக்கும் இப்படி இறக்காமல் உங்கள் நினைவுடன் இருக்க ஆசை வந்து விட்டதா? கையில் 1,50,000 அமெரிக்க டாலர் இருந்தால் இப்பொழுதே நீங்கள் குளிர் பெட்டிக்குள் உறையலாம். வசதி எப்படி?

Jeyam Electrical & Plumbing

★ Plumbing ★ Heating
★ Electrical Work
★ Bathroom Tiling ★ Plastering
★ Indoor & Outdoor Decoration

Also 24 hours Emergency work undertaken
For your information call Jeyam on 081-903 4646



## ஜீன்ஸுடன் கண்டெடுக்கப்பட்ட ஆதிமனிதன்

அல்ப்ஸ் மலைத்தொடரில் ஒரு மாதத்திற்கு முன் உறை பனிக் கட்டிகளுக்கிடையில் இருந்து ஒரு மனித சடலத்தை சில உல்லாசப் பயணிகள் கண்டு பொலீசாருக்கு அறிவித்தார்கள். சடலம் வழக்கம் போல் வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டு பரிசோதிக்கப்பட்டது. பரிசோதனையில் வைத்தியர்கள் அது 500 வருடத்துக்கு முந்தியது என முடிவு செய்தார்கள்.

இச்சடலம் தோலினால் செய்யப்பட்ட ஆடை அணிந்திருந்தது. இதில் விசேடம் என்ன வென்றால் அதன் இடுப்பிற்கு கீழ் டெனிம் ஜீன்ஸ் போல் தோலினால் செய்யப்பட்ட ஆடையே அணிந்திருந்தது. கூடவே வேட்டை ஆடுவதற்கு உதவும் ஆயுதங்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இது இத்தோடு முடிந்து விடவில்லை, இச் சடலத்தை பரிசோதிக்க கோணார்ட் ஸ்பின்ட்லர் எனும் பல்கலைக்கழக விரிவுரையாளர் ஒருவர் அழைக்கப்பட்டார். சடலத்தை பரிசோதித்த அவர் இது 4000 வயதுடைய பிரோன்ஸ் (வெண்கலம்) யுக மனிதன் என்று ஒரு குண்டைத்தூக்கிப் போட்டார். முக்கியமாக இச்சடலத்தில் காணப்பட்ட பங்கசு ஒன்று 4000 ஆண்டு வயதுடையது. தற்போது இதனால் எழும் கேள்வி என்ன தெரியுமா, கிறீஸ்தவ மதத்தின் ஒருபிரிவு மனிதன், கிறீஸ்துவுக்கு முன் 2000 ஆண்டுகளுக்கு முன் தோன்றி பின் சிறிது சிறிதாக நாகரீகமடைந்தான் என கூறுகிறது. ஆனால் இச்சடலத்தை வைத்துப் பார்த்தால் 4000 ஆண்டுக்கு முன்பே மனிதன் நாகரீக வளர்ச்சி அடைந்து விட்டான் என்று கூறலாம். மொத்தத்தில் இச் சடலம் கண்டு பிடிக்கப்பட்டதால் விஞ்ஞானிகள் மட்டுமன்றி இன்னும் பலரும் மண்டையை பிய்க்க வேண்டிய கட்டத்தில் உள்ளார்கள்.

JAFFNA HOUSE
90, Tooting High Street,
London SW17
DO YOU FANCY JAFFNA FOOD
IN LONDON ?
Visit us opposite Tooting Broadway Tube Station
We delight you with

SPECIALS :
FRIDAYS - VEGETARIAN THALI
SATURDAYS - KOOL
SUNDAYS - JAFFNA STYLE FRIED CHICKEN & NOODLES

Caterers for Weddings & parties. Takeaways £15 and over FREE delivery locally

TEL : 081-672 7786, 081-767 6668

Open: Sunday - Thursday 12.00 noon to 12.00 midnight
Friday - Saturday 12.00 noon to 1.00 am

## வேலிக்கப்பால்........

5ம் பக்கத் தொடர்ச்சி

வைக்கிறார். அம்மைவை அதிகம் கவலைப்படுத்த விரும்பாததால் இந்த விபரங்களை நானும் எழுத விரும்பவில்லை. டொக் என்ற தபால் விழும் சத்தம் என்னை எழுப்பியது. இன்று எனக்கு கடிதம் வரும் எனத் தெரிந்ததால் ஒடுகிறேன். இரண்டு நாட்களுக்கு முன்பு மாமாவுடன் தொலைபேசியில் கதைத்த போது கூறியிருந்தார். அவசரமாக கடிதத்தை உடைக்கிறேன். அம்மாவின் கையெழுத்து மனதிற்கு சந்தோஷம் துக்கம் இரண்டையும் தோற்றுவிக்கிறது. ரவி வரமுன் வெளிக்கிட வேண்டும் என யோசித்தவாறு வாசிக்கிறேன்.

அம்மா எனது சுகங்களை விசாரித்த பின் நாட்டின் தற்போதைய நிலைமை பற்றியும், உயர்ந்து விட்ட விலைவாசியின் சுமை பற்றியும் எழுதியபின் முக்கியமான அண்மைக்கால ஊர்ப் புதினமாக பண்டிதருக்கும், சாமிநாதனுக்கும் இடையில் ஏற்பட்ட சாதி சம்பந்தமான முரண்பாட்டை மிக நீளமாக விளக்கியிருந்தாள். பண்டிதர் வீட்டுக் கிணற்றில் தவிர்க்க முடியாத காரணத்தால் நீர் அள்ளியதால் சாதியில் தன்னைவிட தாழ்ந்த சாமிநாதனுடன் இந்த நாட்டுப் பிரச்சனைக்குள்ளும் பண்டிதர் தன் பிடிவாதத்தை விடாமல் பெரும் சண்டையில் ஈடுபட்டிருப்பதாக அம்மா சுட்டிக்காட்டியிருந்தாள்.

கடிதத்தை வாசித்ததும் எனக்கு பண்டிதரின் ஞாபகம் சிரிப்பை வரவழைத்தது. என்ன மனிதர் இவர்? இவருடைய மகளுடைய திருமணம் நிச்சயிக்கப்பட்ட போது எனக்கு பதின்மூன்று வயதிருக்கும். நானும், குமாரும் மற்ற நண்பர்களும் பலகார அறைக்குள் போவதும் வருவது மாக பிஸியாக இருந்தோம். இப்படியே திருமண நாள் வந்தபோது திடீரென்று திருமணம் நின்று போயிற்று. பண்டிதரின் கூச்சல் ஊரைக் கூட்டியது. மகளுக்கு நிச்சயிக்கப்பட்ட மணமகனின் சகோதரன் ஒருவன் சாதி விட்டு மதம் மாறி திருமணம் செய்ததை மாப்பிள்ளை வீட்டார் மறித்து விட்டார்கள் என்பதே காரணம் என அம்மா கூறினாள். எனக்கு அப்போது அதைப்பற்றி கவலையிருக்கவில்லை. என் கவலையெல்லாம் சுட்ட பலகாரங்களை எல்லாம் என்ன செய்வார்கள் என்பதாகவே இருந்தது. அதன் பின் பலவருடங்கள் போன பின்பும் அவர்கள் வீட்டுப் பெண்களுக்குத் திருமணம் எதுவும் சரிவரவில்லை. குமாரும், ரவியும் இலண்டன் போய் விட்டார்கள். அதன்பின் இப்போது நான் ரவியுடன் இருக்க நேர்ந்துள்ளதும், குமார் லிவர்பூல் பல்கலைக்கழகத்தில் படிப்பதும் நிகழ்வாகிப் போனது. குமாரை நான் இதுவரையில் நேரடியாக சந்திக்கும் சந்தர்ப்பம் கிட்டவில்லை. அவனும் ரவியிடம் அடிக்கடி வருவது குறைவாக இருந்தும், அவன் வந்த ஒரு சில சந்தர்ப்பங்களிலும் நான் அறையில் இருக்கவில்லை.

நான் குளித்து இதோ ரவியும் வருகிறான். 'என்ன ரத்தினம் கையிலை கடிதத்தோட யோசனை? அம்மா போட்ட கடிதம் போல இருக்கு.. ஏதாவது புதினம் என்றால் சொல்லு' ரவி கேட்க நான் பண்டிதரின் கதையை தவிர்த்து ஊர் நிலைமை பற்றி மட்டும் கூறுகிறேன். அவனுக்கு தன் தந்தையின் போக்கு தெரியுமாதலால், அவனுக்கு சம்பந்தமில்லாத விடயத்தைப் பற்றி கதைக்க நான் விரும்பவில்லை. ஆனால் இன்று மாலை இந்தக் கதையுடன் அவன் சம்பந்தப்படப் போகிறான் என யாருக்கும் தெரிந்திருக்கவில்லை தான்.

'ரத்தினம் நானும் மறந்து போனன் போன கிழமை இரண்டு டிக்கற் எடுத்தனான். நானும் நீயும் படத்துக்குப் போகலாம் என்று. நாளைக்கு ஷொப்பிங் அலுவலைப் பார்ப்பம். இப்ப மணி 11.30. நாங்கள் இப்ப வெளிக்கிட்டமென்றால் தான் 12.30-க்குப் படம் தொடங்கப் போய்ச் சேருவம்' என்கிறான். நானும் படம் பார்த்து நீண்ட நாட்களாகி விட்டது. கால நிலையும் நன்றாக இருக்க தமிழ்ப்படம் என்பதும் மகிழ்ச்சியைத் தந்தது. பஸ் பிடித்து தியேட்டர் வாசலையடைந்து விட்டோம். படம் தொடங்க இன்னும் நேரமிருந்தது.

லண்டனில் வந்து வெயிலைத் தாங்க முடியாமல் தமிழ் இளைஞர்கள் எல்லோரும் அரை குறை உடையில் தவித்துக் கொண்டிருந்தார்கள். குளிரக் குளிர 'கோக்' அருந்தியும் அவர்களுக்கு வியர்த்து வழிந்ததைப் போல மின்விசிறியின் கீழ் நிற்க ஆசைப்பட்டுக் கொண்டிருந்தார்கள். ஒருவாறு இருக்கையை அடைந்து, இதோ படமும் தொடங்கிவிட்டது. இயக்குனரின் பெயரைப் பார்த்தவுடனேயே நிச்சயம் நல்ல படமாக இருக்கும் என நினைக்கிறேன். இதோ கதாநாயகன் கதாநாயகி திரையில் தோன்ற 'ஊய்.....ஊய்.....' விசில் சத்தங்கள் காதைச் செவிடாக்க தூங்கிக் கொண்டிருந்த குழந்தைகள் எல்லாம் விழித்துக் கொண்டு தாய்மாரையும் எழும்ப வைக்கின்றன. நான் சுவாரசியமாக 'படத்தோடு ஒன்றியிருக்கின்றேன்.

அப்போதுதான் திடீரென ரவி, ஞாபகம் வந்தவனாய், குமாரோடு தொலைபேசியில் அவசரமாக தான் தொடர்பு கொள்ள வேண்டியிருந்ததை விளக்கிவிட்டு, வெளியே போய்விட்டு பதினைந்து நிமிடங்களில் திரும்பி வருகிறான். வந்ததும் என்னையும் அழைத்துக் கொண்டு தியே

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

போகும் போதுதான் நாமிருவரும் குமாரின் திருமண விருந்துக்குப் போகவேண்டியிருப்பதை விபரிக்கிறான். நான்வியப்பை வெளிக்காட்டவில்லை.

நாங்கள் இருவகும் ஒரு மணித்தியாலத்துள் வெம்பிளியை அடைந்து குமார் சொன்ன விலாசத்தை அடைந்துவிட்டோம். விருந்து மண்டபம் எளிமையாக அலங்கரிக்கப்பட்டிருக்க, வந்தவர்கள் அனைவரும் தத்தமது மேசைகளைத் தேடிப்பிடித்து இருந்து சிற்றுண்டிகளை சுவை பார்த்துக் கொண்டிருக்கின்றனர். நானும் ரவியும் அருகருகே அமர்கிறோம். பக்கத்தில் இருந்தவருக்கு ரவியை இன்னாரெனத் தெரியாமல் இருந்திருக்க வேண்டும். அவர் தானாகக் கதையைத் தொடங்குகிறார். 'தம்பி எங்கட ஊரில எல்லாம் கலியாணம் என்றால் இப்பிடியே. தாய் தகப்பனோ சகோதரங்களோ இல்லாமல், திடீரென்று குமாரைப் போல, நேற்றைக்கு பிரான்சிற்கு போய் பொம்பிளையைக் கூட்டிக் கொண்டு வாறதே. ஆனால் சும்மா சொல்லக் கூடாது பொம்பிளை வடிவுதான். அதுக்குத் தக்க குணம் இருந்தால் சரிதான்....' பெரியவர் தன்பாட்டில் தொண தொணக்க எனக்கு இப்போதுதான் குமாருடைய மனைவியைப் பார்க்க வேண்டும் போலிருக்கிறது. முன்னுக்கு மறைத்துக் கொண்டு போய்வருவோரைத் தவிர்த்து கண்களைச் செலுத்திய எனக்கு அந்தப் பெண்ணை எங்கோ பார்த்த மாதிரித்தோன்ற 'ரவி அதுதானே குமார் கட்டின மனுசி' என்கிறேன். 'பின்னை என்ன என்ரை மனுசியோ?' ரவி சிரிக்கிறான். 'இல்லை ரவி எங்கேயோ முந்தி பார்த்த மாதிரி இருக்கு. அதுதான் கேட்டனான்'

'என்ன ரத்தினம் நானே அடையாளம் தெரிஞ்சு கொண்டன். உனக்குத் தெரியேல்லையே? எங்கட சாமிநாதன்ர மகள்தான்' அவன் சொல்லிவிட்டு பரிமாறப்பட்ட வைனை ஒரு கை பார்க்கின்றான். அது அவனுக்கு வழமையாகப் பாவிக்கும் பியருக்கு முன்னால் எடுபடவில்லை என்பதை முகம் காட்ட நான் மட்டும் அதிர்ந்து போய் கண் இமைக்க மறந்து இருக்கிறேன்.

ஊரில் இன்னும் ஜென்மப் பகையாய் விளங்கும் பண்டிதரும் -சாமிநாதனும், அவர்களுடைய சாதிப்பிரச்சனையும் லண்டனுக்கு வந்த குமாரிடமும் சாமிநாதனின் மகளிடமும் தோன்றவில்லையா? அல்லது இது தற்செயலாக ஏற்பட்ட விபத்தா? இதனால் பாதிக்கப்படப்போவதாக நினைக்கும் பெற்றோர்களின் நிலையைப்பற்றி குமாருக்குக் கவலை இல்லையா? இதையே ஷாமினியோ தரனோ ஏற்படுத்திக்கொண்டால் மாமாவும், மாமியும் நிச்சயமாக சந்தோசத்துடன் ஏற்றுக்கொள்ளுவார்கள் என்பது மட்டுமல்ல வேறு நாட்டவனோ அல்லது வேற்றுமொழி பேசுபவனோ இவர்கள் எதுவும் சொல்லமாட்டார்கள் அல்லவா? ஆக மொத்தத்தில் இந்தப் பிரச்சனைகளுக்கு வளர்ப்பு முறை அல்லது சூழ்நிலையும் சுற்றியுள்ள சூழலும்தான் காரணமா? யோசித்துப்பார்க்க எனக்குத் தலை சுற்றுகிறது. காலையில் அம்மாவின் கடிதத்தில் பாதிப் பேப்பரை நிரப்பிய பண்டிதரும், சாமிநாதனும் என் மனதில் கத்தியுடன் குத்துப்பட, அதே நேரத்தில் அவர்களின் வாரிசுகள் கை இணைந்து அழகிய கத்தியால் 'கேக்கை' வெட்டிக்கொண்டிருக்கிறார்கள்.

> "தமிழ் இளைஞர்கள் எல்லோரும் வெயிலைத் தாங்க முடியாமல் அரைகுறை உடையில் தவித்துக் கொண்டிருந்தார்கள்"

எனக்கு அதிர்ச்சியும், சந்தோசமும், சிந்தனையும் சேர்ந்து கலந்து தலையைச் சுற்ற வைக்க நான் மெல்ல மேசையில் தலையைக் கவிழ்க்க, இரண்டு கிழமைக்கு முன்தான் ஊரில் இருந்து வந்த கந்தசாமி அண்ணை 'என்ன தம்பி கோக் கலக்காமல் அடிச்சிட்டாய் போல இருக்கு....' கேட்டவாறே என்னைத் தாங்குகிறார்.

(யாவும் கற்பனை)

www.tamilarangam.net



# விடுதலைப்புலிகளுக்கு பிடிவிறாந்து

(விசேட நிருபர் கார்த்.14)

புலிகள் இயக்கத்தின் உளவுப்பிரிவின் தலைவர் பொட்டு அம்மான் உட்பட டேவிட், டானியல், திலீபன், ரவி, சாந்தன் ஆகிய அறுவரையும் நவம்பர் 11ம் திகதிக்கு முன் சரணடையுமாறு இந்திய நீதிமன்றம் உத்தரவு இட்டுள்ளது.

பொட்டு அம்மான், ரஜீவ் காந்தியை கொல்ல நேரடியாக உத்தரவு இட்டவர் என்றும், ஏனைய ஐவரும் ஈ.பி.ஆர்.எல்.எப் இயக்கத் தலைவர் பத்மனாபா கொலை வழக்கில் சம்பந்தப் பட்டவர்கள் என்றும் இந்த நீதிமன்றம் குற்றம் சாட்டியுள்ளது. பத்மநாபாவின் கொலைக்கு டேவிட் என்பவரே தலைமை தாங்கிச் சென்றார் என்றும், இவ் அறிக்கை கூறுகிறது.

மேலும் தமிழ் நாடு அரசு அறிக்கையின்படி, தமிழ் நாட்டிற்கும் இலங்கைக்கும் இடையில் நடந்து வந்த கள்ள படகுச் சேவைகளைத் தாம் முற்றாக நிறுத்தி விட்டதாகவும், 289 படகுகளை பறிமுதல் செய்ததுடன் கடற்படை ரோந்து அதிகரிக்கப் பட்டுள்ளதாகவும் அறிவித்துள்ளது.

# இலங்கை அகதிகள் மார்கழியில் திருப்பி அனுப்பப்படுவர்

(இந்தியா கார்த்.11)

தமிழ் நாட்டிலிருந்து முதல் தொகுதி தமிழ் அகதிகள் மார்கழி மாத நடுப் பகுதியில் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்படுவர். இந்தியாவில் தங்கியிருக்கும் 53,661 அகதிகளில் 16,663 பேர் தாம் திரும்பி இலங்கை செல்ல சம்மதம் தெரிவித்துள்ளனர். மீதி 36,998 பேர் தாம் திரும்பிச் சென்றால் தம் உயிருக்கு ஆபத்து எனக்கூறி மறுப்புத் தெரிவித்துள்ளனர்.

# திரிசங்கு நிலையில் யாழ் மக்கள்

(ஆனந்த சங்கர்)

வடபகுதியில் பெய்துவரும் கடும் மழைக்கு மத்தியில் இராணுவத்தினதும் விடுதலைப் புலிகளினதும் வானொலிச் செய்திகளைக்கேட்டு மக்கள் குழப்பமடைந்த நிலையில் உள்ளார்கள். இராணுவத்தினரோ தாம் வெகுவிரைவில் யாழ்க்குடாவை சுற்றி வளைத்து தாக்கப் போவதாகவும், ஆனால் மக்கள் தம் அறிவுறுத்தலின் படி நடந்தால் அவர்கட்கு எவ்வித பாதிப்பும் எற்படாது என கூறி வருகிறார்கள். விடுதலைப் புலிகளோ மக்களை உஷார் படுத்துவதுடன் பயப்படவேண்டாம் என அறிவித்தும் வருகிறார்கள்.

கடும் மழை காரணமாக அங்கு அரிசி, பருப்பு, மா, சீனி ஆகிய அத்தியாவசியப் பொருட்கள் தனியார் கடைகளில் கூட விற்பனைக்கு இல்லை எனவும், ஒரு போத்தல் மண்ணெண்ணை 300 ரூபாவுக்கும், சவர்காரம் 75 ரூபாவிற்கும் விற்கப்படுவதாகவும் அங்கிருந்து வரும் செய்திகள் கூறுகின்றன. இச் செய்தியில் அரிசி விலை 35 ரூபாவாக மட்டுப்படுத்தப்பட்டுள்ள போதிலும் அரிசியை கண்ணால் காண்பதே அரிதாக உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இருப்பினும் அரச நிவாரண விநியோகம் கடந்த சில நாட்களாக அதிகரித்திருப்பினும் தரம் குறைந்த அரிசியே விநியோகிக்கப்படுகிறது. அத்துடன் ஒரு துண்டு விறகு 5 ரூபாவிற்கும், ஒரு தென்னைமட்டை 2 ரூபா விற்கும் விற்கப்படுகிறதாம்.

# சன நெரிசலால் மிதி வெடியில் சிக்கினர்

(வவுனியா)

வடக்கிலிருந்து வவுனியா நோக்கி வந்த ஐயாயிரத்துக்கு மேற்பட்டோர் முண்டியடித்துக் கொண்டு நொச்சிமோட்டை சோதனை முகாமுள் நுழைய முற்படுகையில், சனநெரிசல் காரணமாக பாதையை விட்டு விலகிய நால்வர் மிதிவெடியில் சிக்கி பலத்த காயத்துக்குள்ளானார்கள். யாழ்பாணம் கஸ்தூரியார் வீதியைச் சேர்ந்த சதாசிவம் மகேந்திரராஜா, உதயநகரைச் சேர்ந்த வீ. வெற்றிவேலாயுதம், குருநாதன், உருத்திரபுரத்தைச் சேர்ந்த செல்லையா ஆகியோரே இவ்வாறு காயம் அடைந்தோர் ஆவர். அனைவரும் உடனடியாக அனுராதபுரம், வவுனியா ஆகிய வைத்தியசாலைகளுக்கு எடுத்துச் செல்லப்பட்டனர்.

# புலிகளால் எழுபது பேர் வெளியேற்றப்பட்டனர்

வவுனியா கோழியகுளம் பகுதியைச் சேர்ந்த 70 பேர் வெளியேற்றப்பட்டு அகதிகளாக தம்முடன் பாதுகாப்பாக தங்கியிருப்பதாக புளொட் இயக்கம் அறிவித்துள்ளது. விடுதலைப்புலிகள் இவர்கள் தம்முடன் ஒத்துழைத்து நடக்கவில்லை என காரணம் காட்டியே இவர்களை வெளியேற்றியதாகவும் தாம் இவர்களை பாதுகாப்பான இடத்தில் தங்க

9 ஆம் பக்கம் பார்க்க

# யாழ்நகரில் ஒரு தாள்ப் பத்திரிகை

(யாழ் நிருபர்)

தற்போது யாழ் நகரில் வெளிவரும் ஒரே ஒரு பத்திரிகையான முரசொலி ஒற்றைத் தாளில் இரு பக்கங்களில் மட்டுமே வெளியாகிறது. இதன் விலையோ ஐந்து ரூபாவாக இருப்பினும் மக்கள் செய்திகளை அறிவதற்கு இதனை முண்டியடித்து வாங்குகிறார்கள். மேலும் தற்போது யாழ்நகர நடைபாதைகளில் பல உணவுப் பொருட்கள் விற்கப்படுகின்றன ஆனால் அவை எல்லாம் தரம் குறைந்ததுடன் நாட்பிந்தியவை. அத்துடன் 250 ரூபாவுக்கு விலைப்பட்ட மண்ணெண்ணை தற்போது 100 ரூபாவுக்கும் தேங்காய் எண்ணை 40 ரூபாவுக்கும் விற்கப்படுகிறது. ஆனால் தற்போது ஒருவர் 12 சவர்க்கார கட்டிகளை வடக்குக்கு எடுத்துச் செல்ல இராணுவம் அனுமதிக்கிறது.

# யாழ் நகர் கட்டிடங்கள் மீண்டும் சேதம்

(கொழும்பு நிருபர்)

கடந்த மாதம் விடுதலிப் புலிகள் ஹெலிக்கப்டர் ஒன்றை நோக்கி தாக்கியதை அடுத்து விமானப்படை ஒரு மணிநேரம் யாழ்நகரில் குண்டுமாரி பொழிந்துள்ளது. இக்குண்டுத் தாக்குதல் காரணமாக கொட்டடி, ஆஸ்பத்திரி வீதி பகுதிகளில் உள்ள கட்டிடங்கள் தரை மட்டமாகியுள்ளதாக கொழும்பு வந்தடைந்துள்ள யாழ் வாசிஒருவர் தெரிவித்துள்ளார். இவர் மேலும், சங்குப்பிட்டி, பூநகரி தாக்குதலால் 800 குடும்பங்கள் இடம் பெயர்ந்து யாழ்ப் பாடசாலைகளில் தங்கியுள்ளதாகவும், தீவுப் பகுதியிலிருந்து இடம் பெயர்ந்தவர்கள் வலிகாமம் பகுதியில் தஞ்சம் புகுந்துள்ளதாகவும் தெரிவித்தார். ஆனால் புங்குடு தீவை விட்டு சிறிதளவு மக்களே வெளியேறி உள்ளதாகவும் கூறினார்.

## செய்திச் சுருக்கம்

# 1000 பிச்சைக்காரர் கைது

(எம்.எஸ்.சலீம் )

அண்மையில் நடைபெறவிருந்து இடைநிறுத்தப்பட்ட சார்க் மகாநாட்டிற்கு வரவிருந்த பிரதிநிதிகளிடமிருந்து மறைப்பதற்காக ஆயிரத்திற்கு மேற்பட்ட பிச்சைக்காரர்கள் கைது செய்யப்பட்டு பலவந்தமாக கொழும்புப் பகுதியை விட்டு வெளியேற்றப் பட்டுள்ளனர். இவர்களுக்கு சிறு தொகை பணமும் கொடுத்து கொழும்பு பகுதிக்கு சிறிது காலத்திற்கு தலைகாட்டக்கூடாது எனவும் கேட்கப்பட்டுள்ளார்கள்.

# யாழ்நகரில் 'கெலித்தாக்குதல்

(ஆனந்த சங்கர்)

கடந்த சில தினங்களாக இராணுவத்தினர் யாழ் நகரில் அரியாலை, சுண்டிக்குளம், கொழும்புத்துறைப் பகுதிகளில் கெலிக்கப்டர் மூலம் தாக்கி வருவதாக விடுதலைப் புலிகள் அறிக்கை விடுத்துள்ளனர். இவ்வறிக்கையில் மேலும், மாவிட்டபுரத்தில் போராளிகளின் காவல் அரணைக் கைப்பற்ற முற்பட்ட இராணுவத்திரை, தாம் திருப்பித் தாக்கி பலத்த சேதத்துடன் பின்வாங்க வைத்துள்ளதாகவும் அம்பாறை, மட்டக்களப்பு பகுதிகளில் தாம் உக்கிரமாக இராணுவத்தினர் மீது தாக்கி வருவதாகவும் கூறியுள்ளனர். அத்துடன் அம்பாறையிலிருந்து இடம் பெயரும் தமிழ் மக்களின் வீடுகளுக்கு சிங்களவர்களை இராணுவம் குடியேற்றுவதாகவும், இப்பகுதி மக்களின் பாதுகாப்புக்காக தாம் தொடர்ந்தும் போராடி வருவதாகவும், யாழ்க் குடாவில் மருத்துவ வசதி இன்மையால் மகப்பேற்றின் போது இறக்கும் தாய்மார்களின் எண்ணிக்கை அதிகரித்திருப்தாகவும் தெரிவித்துள்ளனர்.

# இலங்கை இன பிரச்சனையைத் தீர்க்கக் குழு

(கொழும்பு நிருபர் எம்.எஸ்.சலீம்)

இனப்பிரச்சனையை தீர்க்கும் வகையில் யோசனைகளை கண்டறிய பாராளுமன்ற தெரிவுக்குழுவில் இடம்பெறும் அங்கத்தவரின் பட்டியலை அரச, எதிர் கட்சிகள் சபாநாயகருக்கு அறிவித்துள்ளன. 23 அரசகட்சி உறுப்பினர்களும், 20 எதிர்கட்சி உறுப்பினர்களும் அடங்கிய இந்தக் குழுவில் தொண்டமான், ஹமீது உட்பட அறுவரே சிறுபான்மை இனத்தவர்.

# புலிகள் மட்டக்களப்பில் கடுந்தாக்கு

(எம்.எஸ்.சலீம் கார்த். 14)

கடந்த வாரம் மட்டும் மட்டக்களப்பு பகுதியில் விடுதலைப் புலிகளின் தாக்குதலில் 25க்கும் மேற்பட்ட இராணுவத்தினர் பலியாகி உள்ளனர். இவர்களிடமிருந்து பெரும் தொகை ஆயுதங்களையும் வெடி மருந்துகளையும் விடுதலைப் புலி

கொழும்பில் இருந்து வரும் செய்திகள் கூறுகின்றன. வட பகுதி தாக்குதல்களை முறியடிக்கும் வகையில் விடுதலைப் புலிகளும் பரந்த அளவில் தாக்குதல் நடாத்த திட்டமிட்டு வருவதாக இந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. விடுதலைப் புலிகளின் நடவடிக்கையை முறியடிக்கும் வகையில் இலங்கை

தல்களை ஆரம்பித்துள்ளது.

மட்டக்களப்பில் புலிகளை அழிக்கும் நடவடிக்கைக்கு பூமரம் என்றும் அம்பாறையில் நடாத்தும் தாக்குதலுக்கு இழுவை விரிப்பு என்றும் பெயர் சூட்டியுள்ளது. மட்டகளப்பு அம்பாறை பகுதிகளில் விமான குண்டு வீச்சு தாக்குதல்கள் நடை பெற்றுள்ளதாகவும் இதனால் பலத்த உயிர், உடமைச் சேதங்கள் ஏற்பட்டிருக்கலாம் எனவும் அஞ்

Global Printers

164A, (Rear) Mitcham Road,
Tooting,
London SW17 9NJ.
Tel: 081-767 8895

We Undertake the following work at reasonable rates:

PRINTING - SINGLE AND MULTI COLOUR
TAMIL & ENGLISH

Letter Heads, Business Cards,
Compliment Slips, Invoices.
Wedding Cards, Invitation Cards.
Leaflets, Posters, Tickets.

Global Printers

For prompt service at reasonable rates
call us on 081-767 8895

OPEN SEVEN DAYS A WEEK
FROM 10.00a.m. to 5.00p.m.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்